ഭാഗവതം

[illegible] 17 [illegible] 1, 2

14 [illegible] 1934

3L
[illegible]211, N02G5
N34.17.1,2
210474

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

17 APR 1934
MADRAS

இது

முப்பத்திரண்டு ஆண்டுகளாக நடைபெறுந்

தனித் செந்தமிழ் வெளியீடு

A BI-MONTHLY

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௪, சித்திரை, வைகாசி

திருமலர், ௧௭.] [இதழ், ௧, ௨.

பொருளடக்கம்

இளைஞர்க்கான இன்றமிழ்

(Pure Tamil Reader for the Young, second book)

சிறுவர்க்கான செந்தமிழின் ஆங்கில முகவுரை மிச்சம்

(English Preface to the Pure Tamil Reader, first book)

தொலைவிலுணர்தல் (Telepathy) தொடர்ச்சி.

ஆசிரியர் :

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

SWAMI VEDACHALAM,

பொதுநிலைக்கழக குரு,

பல்லாவரம்

PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள

திருமுருகன் அச்சுக்கூடத்திற்

T. M. PRESS

பதிப்பிக்கப்பட்டது.

14th April, 1934

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஞானசாகர நேயர்க்கு

அறிவுக்கடலாலும், இதன்கண் வெளிவருந் தமிழ்நூல்களாலும் ஆயிரக்கணக்கான நந்தமிழ்மக்களுக்குத் தனித்தமிழறிவும் மெய்ப்பொருளுணர்ச்சியும் மிகுந்துவருகின்றன. தனித்தமிழ்ச்சுவை கண்டபின் நம் உண்மைத் தமிழ்மக்கள் தனித்தமிழ் நூல்களைப் பயிலவே விரும்புகின்றனரல்லாற் கலப்புப் பிழைத்தமிழ் நூல்களைச் சிறிதும் விரும்புகின்றிலர்.

நமது தாய்மொழியாகிய தமிழ் ஒன்றுதான் பழைய நாகரிக மொழிகளில் இன்றுகாறுந் தன் புத்திளமை வாடாமல் வழங்கிவருகின்றது. மற்றை ஆரியம், கிரேக்கம், இலத்தின், ஈபுரு முதலான மொழிகள் எல்லாம் எத்தனையோ காலத்திற்கு முன்னமே மக்களாற் பேசப்படாமல் இறந்துபோயின. இப்போது உலகமெங்கணும் வழங்கும் பல்வேறு மொழிகளோ அறுநூறு அல்லது எழுநூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டவைகளேயாகும். ஐயாயிர ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட **தொல்காப்பியம்** முதல் இன்றுவரையில் தொடர்பாக இயற்றப்பட்டுள்ள அரியபெரிய இலக்கண இலக்கிய அறிவுநூல்கள் எல்லாம் நமது செந்தமிழ்மொழியின்கண் இருத்தல்போல இறந்துபட்ட ஏனைப் பழையமொழிகளிலும், இப்போது இவ்விந்தியநாட்டின்கண் வழங்கும் புதுமொழிகளிலும் இல்லை. ஆகையால், இத்துணைச் சிறந்த நமது செந்தமிழ்மொழியை அறிவிலும் நாகரிகத்திலுஞ்சிறந்த நம்முன்னோர்கள் எவ்வளவு தூயதாகப் பாதுகாத்து வழங்கினார்களோ, அவ்வளவு தூயதாக அதனைப் பாதுகாத்து வழங்குதல் உண்மையான ஒவ்வொரு தமிழ்மகனுக்கும் ஒவ்வொரு தமிழ்மகளுக்கும் முதற்பெருங்கடமையாகும். நம்முன்னோர் எத்தனையோ ஆயிர ஆண்டுகளாக வழங்கிய அருமருந்தன்ன செந்தமிழ்ச்சொற்களைக் குறைவாக நினைந்து, அவற்றை விட்டு, வடசொல் ஆங்கிலச்சொற்களைத் தமிழிற் கலந்து பேசும் எழுதும் எவரும் உண்மைத்தமிழர் ஆகார்; அவர் தம் முன்னோரையும் ஒப்புயர்வில்லாத் தம் தமிழ் அன்னையையும் இகழ்ந்தவராகவே ஆன்றோரால் இகழப்படுவர். வடமொழியிலும் ஆங்கிலத்திலுந் தமிழ்ச்சொற்களை எவரேனுங் கலந்து பேசுதல் எழுதுதல் செய்வராயின், அம்மொழிக்குரியார் அவரை எவ்வளவு எள்ளுவர் என்பதை நம்மனோர் எண்ணிப்பார்க்கவேண்டும்.

நமது செந்தமிழ் அன்னை முன்னாளிற்போல் இந்நாளிலுந் தன் தனிச்சிறப்புடன் விளங்கவேண்டுமென்பதற்காகவே, இதனையும் முப்பத்திரண்டுக்கு மேற்பட்ட தமிழ்நூல்களையும் பேருழைப்பும் பெரும்பொருட்செலவுஞ் செய்து வெளியிட்டுவருகின்றோம். நம் தமிழ்மக்கள் இத்தகையதொண்டைத் தாமே செய்தற்கு இயலாதவர்களாயிருந்தாலும், நம் அறிவுக்கடலையும் நூல்களையுமாதல் தமிழராவார் எல்லாரும் வாங்கிக்கற்றுப் பெரும்பயன் அடையும்படி செய்வது கட்டாயமாகும். பிறர்நலங் கருதாது தந்நலமே கருதியிருப்பவர் விலங்கினுங் கடைப்பட்டவராவர். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று நம் **ஆசிரியர் திருமூலர்** அருளிச்செய்ததை நினைவிற் பதித்திடுக! அறிவும் அறமுமே கூடவரும்; அல்லாதனவெல்லாம் உடம்போடு ஒழியுமென்றும் உணர்ந்திடுக!

ஞானசாகர ஆசிரியர்.

17 APR 1934
MADRAS

ஓம்.

இளைஞர்க்கான இன்றமிழ்

திங்களைத் தொழுதல்

"திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண்குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்தலான்." **சிலப்பதிகாரம்.**

திங்களை வடநூலார் 'சந்திரன்' என்னும் பெயரால் வழங்குவர்; தமிழ்மக்கள் அதனை நிலவு, அம்புலி, பிறை, திங்கள், தண்கதிர், கலையோன், இரவோன், அலவன், அல்லோன், மதி, களங்கன், குரங்கி, முயற்கூடு முதலான பலபெயர்களால் வழங்காநிற்பர். குளிர்ந்த ஒளியினை நிலவு எனத் தமிழ்நூலார் கூறக் காண்டலால், குளிர்ந்த ஒளியினைத்தருந்திங்களும் நிலவு எனப் பெயர்பெறுவதாயிற்று. அம்புலி என்னுஞ்சொற் சிறுமகாரால் இடப்பட்டதாகும். பிறை என்பது மறைநிலா நாளின்பிற் பிறந்த சிறுதிங்களுக்குப்பெயராக வழங்குகின்றது; புதிது பிறத்தலிற் பிறையெனப்பட்டது. உயிர்கள் உடம்புகளில் நிலைபெற்றுவளர்தற்குரிய அமிழ்து நிலவொளியிலிருந்து வருதலாலும், அவ்வமிழ்து தமிழிற் 'கள்'எனப் பெயர் பெறுதலாலும், இனிமையெனப் பொருள்தரும் தீம் என்னுஞ் சொற்குறுகித் திம் என நின்று கள் என்னுஞ் சொலொடுகூடித் திங்கள் என அதற்குப்பெயராயிற்று. தண்கதிர் என்பது அது குளிர்ந்தஒளியினைத் தருதலால் வந்த பெயராகும். கலையோன் என்பதிற் கலையென்பது நிலவொளியின் ஒருபகுதியைக் குறிக்கும்; நாளுக்கொரு கலையாக வளர்தலுந் தேய்தலுமாகிய தோற்றந் திங்களிற் காணப்படுதலால் அதற்குக் கலையோன் எனும் பெயர்

போந்தது. இராப்பொழுதில் விளங்குதல்பற்றி அஃது இரவோன், அலவன், அல்லோன் எனும் பெயர்களைப் பெற்றன; அலவன், அல்லோன் என்பவற்றின் முதல் நின்ற அல் என்னுஞ்சொல் இராக்காலத்துக்குப் பெயராகும். இனி, அது பதினைந்துநாள் வளர்ந்தும் பதினைந்து நாள் தேய்ந்தும் முப்பதுநாள் கொண்ட ஒருகாலத்தை வரையறுத்தலால் மதியெனப் பெயர்பெறலாயிற்று; மதித்தல் என்பது வரையறுத்தல். இங்ஙனந் திங்களால் வரையறுக்கப்படுதல்பற்றி முப்பதுநாள்கொண்ட ஒருகாலவளவுந் திங்களெனச்சொல்லப்படும். திங்களை வடநூலார் 'மாசம்' என்பர். இன்னும் அஃது இடையிடையே கறையுடையதுபோற் காணப்படுதலாற் களங்கன் என வழங்கப்படுகின்றது. குரங்குஎனுஞ் சொல்வளைவு எனப் பொருடருதலால், வளைந்துதோன்றும் பிறை குரங்கி எனப்பெயர்பெற்றது. இனித் திங்களிற் காணப்படுங் கறை சிறுமகார் கண்களுக்கு முயல்வடிவாகத் தோன்றுதலிலிருந்து அவர் அதனை முயல் உறையுங்கூடாக வழங்க, அதனால் முயற்கூடு என்னும் பெயரும் அதற்கு உளதாயிற்று என்க.

இங்ஙனம் பல்வகைப்பெயர்களானும் வழங்கப்பட்டுத் திகழும் நிலாமண்டிலமானது, வெம்மை மிகுந்த இத் தமிழ்நாட்டிலுள்ளார்க்கு இராக்காலத்தே குளிர்ந்த மெல்லியஒளியினைத் தருதலால், அவர்கள், பகற்காலத்தே விளங்கும் ஞாயிற்றினைக்காட்டிலும், இராக்காலத்தே வெப்பத்தையும் அயர்வையும் நீக்கித் தமக்கு அங்ஙனந் தண்ணொளிதருந் திங்களையே மிகமகிழ்ந்துகொண்டாடா நிற்கின்றனர். மேலும், நிலவொளி இல்லா இராக்காலத்தே இருள் திணிந்திருக்க, அவ்விருளிற் பாம்பு, தேள், நட்டுவாய்க்காலி, பூரான், செய்யான்முதலான நச்சுயிர்களும்; புலி, கரடி, அரிமா, ஓநாய், நரி முதலான மறவிலங்குகளும்; கள்வர், திருடர், கொலைஞர்முதலான கொடிய

மக்களும் இயங்கி, மாந்தருக்கும், மாந்தருக்குப் பலவகையிற்பயன்படும் ஆடு, மாடு, குதிரைமுதலான அறவிலங்குகட்கும் பெருந்தீங்கையும் பெருந்துன்பத்தையும் பொருட்கேடு உயிர்க்கேடுகளையும் விளைவித்தலால், இருள்நிறைந்த இராப்பொழுதைக் காண்டலும் அமைதியான வாழ்க்கைசெலுத்தும் மக்கள் அனைவரும் நெஞ்சந் துணுக்குறுகின்றனர். அங்ஙனம் நெஞ்சந்துணுக்குறாமல் துணிவாய் நள்ளிருளில் விளக்குமின்றி வழிநடந்து செல்லும் நாட்டுப்புறத்தாரில் எத்தனைபேர் அரவுதீண்டியும் புலிகோட்பட்டும் ஐயோ! வீணேசாகின்றனர்! இன்னும் எத்தனைபேர் தேள், நண்டுத்தெறுக்கால் கொட்டியும், பூரான், செய்யான் கடித்தும் ஆற்றொணாப்பெருந்துன்பம் உழக்கின்றனர்! இவ்வளவுகேட்டுக்குந் துன்பத்திற்கும் ஏதுவான இருள்செறிந்த இராப்பொழுதினைக் கண்டவுடனே மெல்லிய நெஞ்சமுடையார் எல்லாரும் அஞ்சிக்கலங்குதல் ஏற்பதேயாகும். உயிரினருமையும் உடம்பினருமையும் இன்பவாழ்க்கையினருமையும் அறியா விலங்குகளையொத்த மாக்கள், கரிய இருள்சூழ்ந்த இரவைக்கண்டு கலங்காராயினும், அவ்வருமைகளையும், அவைகளை அருள்கூர்ந்து வழங்கிய ஆண்டவன் நோக்கத்தையுஞ் சிறிதாயினும் உணர்ந்துபார்க்கத்தக்காரெவரும் இருளிரவைக்கண்டு மருளாதிரார். சிறிதுணர்வுடையாரே அவ்வாறாயிற், பெரிதுணர்வுடைய பாவலர், நாவலர், நல்லிசைப்புலவர், சான்றோர், ஆன்றோர் முதலாயினாரெல்லாரும் பொங்கிருள்செறிந்த கங்குற்காலத்தில் எங்ஙனம் உளம் அழுங்குவாராதல்வேண்டும்! நுண்ணுணர்வும் மென்மைத்தன்மையும்வாய்ந்த அவரல்லரோ இராப்பொழுதில் எழிலொளிகிளர்ந்து முழுமதிவிளங்குதல்கண்டு வரம்பிலாமகிழ்ச்சி நிரம்பிநிற்றற்குரியார்! நிலவொளியின் அழகை மிகுதியாய் உணர்ந்து இன்புறாத நாட்டாட்களுங் காட்டாட்களுங்கூட, நாட்டிலுங்காட்

யிலுந் தாம் வழிதெரிந்து செல்லுதற்குந், தீயஉயிர்களால்
ஊறுசெய்யப்படாமல் அவைகளை விலகிச்செல்லுதற்கும்
நிலாவெளிச்சம் உதவிசெய்தல்பற்றி அதனை மிகவும்
விரும்பாநிற்கின்றனர்.

மற்று, அதன் வனப்பையும் பயனையும் அறிந்து
இன்புறுகின்ற உணர்வுடையாரோ "நிலவு எப்போது
வரும்! நிலவு எப்போதுவரும்!" என்று அதன் வருகை
யை எதிர்பார்த்தவண்ணமாய் இருக்கின்றார்கள். முழு
விருள் கழிந்த மூன்றாம்நாள் மாலையில் மேல்பாற் செக்
கர் வானத்தின்கண்ணே வளைந்த வெள்ளிக்கம்பிபோற்
காணப்படும் பிறைக்கொழுந்தினை அவர்கள் எத்துணை
ஆவலுடன் உற்றுநோக்கிக் கண்டுதொழுகின்றனர். இரு
ளில் ஏங்கிக்கிடந்த அறிஞரின் கண்களுக்கல்லவோ அச்
சிறுபிறையின் வெளிச்சமும் பெரிதாய்க்காணப்படுகின்
றது. புறத்தேயுள்ள இருளைத்துரக்கும் பிறையின்றோற்
றம் அகத்தேயுள்ள மலவிருளைத்துரக்கும் இறைவன்றன்
அருளொளித்தோற்றத்திற்கு அடையாளமாய் வயங்கு
கின்றதன்றோ? மாலைப்போதில் மேல்பாற் சிவந்தொளி
ரும் ஞாயிற்றினை இறைவன் திருமுகமாகவும், அஞ்ஞா
யிற்றின் உச்சியிற் கிளர்ந்து வானிற்பரந்து பாரித்து விளங்
குஞ் செக்கர் ஒளியினை இறைவன் திருமுடிமேலுள்ள
சடைப்பரப்பாகவும், அச்செக்கர்வானிற்றோன்றும் பிறை
யினை அச்சடைப்பரப்பிற் றங்கும் பிறையாகவுங் கருதி
அதனை வழிபட்டுவருந் தமிழ்நாட்டு மேன்மக்களின்
உயர்ந்தகருத்துங் கடவுட்கொள்கையும் பெரிதும் வியக்
கத்தக்க விழுப்பமுடையனவாய்க் காணப்படுகின்றன
வல்லவோ? அழகும் அறிவுங் கெழுமத் தோன்றிய இத்
தமிழ்ப் பெருங்கொள்கை வேறெந்தநாட்டவரிலுங் கா
ணப்படுகின்றிலது. தமிழ்நாட்டுமாதர்கள், மணம் ஆகாத
தம் பெண்மக்கட்கு விரைவில் மணங்கூடும்பொருட்டு
அவர்கள் மூன்றாம்பிறையைத் தொழும்படி செய்யும்

வழக்கம் முன்னிருந்தமை, **திருவாதவூரடிகள்** அரு
ளிச்செய்த,

"மைவார் கருங்கண்ணி செங்கரங்கூப்ப மறந்துமற்றப்,
பொய்வானவரிற் புகாதுதன் பொற்கழற்கே யடியேன்,
உய்வான் புகவொளிர் தில்லைநின் றோன்சடை மேலதொத்
தச், செவ்வானடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்
கே" என்னுந் **திருச்சிற்றம்பலக் கோவையார்** திருப்
பாட்டினால் நன்கு விளங்குகின்றது.

இவ்வாறு இருளிரவுகழிந்த மூன்றாம்நாட் டோன்
றுஞ் சிறுபிறையின் வடிவே, பின்வரும் நிலாநாள் இரவு
களை முன்னறிவித்து, இயற்கை யொளித்தோற்றத்தில்
இறைவனது விளக்கம் முனைந்துநிற்றலை நினைவில் எழச்
செய்து எல்லாரையும் இன்புறுத்துமானால், அடுத்து
வரும் நாட்களில் அப்பிறை வரவரவளர்ந்து குளிர்ந்த
பேரொளிவீசி இராப்பொழுதை இராப்பொழுதாக்குங்
கால், அது நம்மனோர்க்கு இன்னும் எத்துணை மிகுந்த
மகிழ்ச்சியினைப் பயப்பதாகல்வேண்டும்! மூன்றாம்பிறைக்
குப்பின் நாலைந்துநாட் சென்றபின் நீலவானிற் றிகழும்
பாதிமதியினைக்கண்டு மகிழ்ந்து, அதன் அழகிய காட்சி
யினைப் புனைந்துபாடிய நல்லிசைப்புலவரிற் சிலர், அதனை
வானக்கடலிற் செல்லும் ஓர் ஓடமாகச் சொல்லியிருக்
கின்றனர்; பின்னுஞ்சிலர் இருள் என்னும் அரக்கனைத்
துணித்தற்கு இந்நிலமங்கை உயர ஏந்திய ஒருகொடுவா
ளாகவும் அதனைக்கூறினர். பின்னர்ப்போந்த முழுநிலாக்
காலத்தே அதன்முழுவட்டப் பேரொளியை நோக்கிக்
களிகூர்ந்த பாவாணர்சிலர் அதனை வானெனும் வாவியில்
மலர்ந்த ஒரு தூவெண்டாமரை மலரேயெனச் சொற்ற
னர்; பாற்கடல் கடைந்தஞான்றெழுந்த வெண்பொற் பாற்
குடமே அம்முழுமதி யெனவும், அக்குடத்தினின்று
தெறித்துச்சிதறிய பாற்றுளிகளே அதனைச்சூழமிளிரும்
விண்மீன்களெனவும் விளம்பினர்; மற்றுஞ்சிலர் அதனை

வான் எனும் நீலப் பட்டாடையின்கீழ் நாலத் தூக்கிய பளிங்கு விளக்கேயெனப் பகர்ந்தனர். இவ்வாறாகப் பாவலரும் நாவலரும் புலவரும் அறிஞரும் நிலவின் அழகிய காட்சியை நோக்கி வியந்து மகிழ்ந்து அதனைப் புனைந்துரைத்த அணிந்துரைகள் அளவிலாதனவாய் விரிந்துகிடக்கின்றன.

இங்ஙனமெல்லாம் பண்டைச் செந்தமிழ்ப்புலவர் திங்களின் அழகிய காட்சியினை வியந்துபாடியதுமன்றி, அதன் தோற்றவொடுக்கங்களால் நிலையில்லா வாழ்க்கையினையுடைய மக்கள் அறிந்துகொள்ளவேண்டிய நிலையான உண்மைகளையும் எடுத்துக்காட்டி அறிவுதெருட்டியிருக்கின்றனர். திங்களானது கலைநிரம்பிய பதினைந்து நாட்களுக்குப்பிற் சிறிதுசிறிதாகத் தனது விளக்கங் குன்றிக் கடைசியாகத் தானென்றொருமுதல் இல்லாதது போல் மறைந்துபோகின்றது. அதுபோலவே, மக்களில் எத்துணைச்சிறந்த நிலையில் இருந்த அரசருஞ்செல்வரும் பிறருந் தமது செல்வவாழ்க்கையும் உடம்பின் உரமும் வரவரக்குன்றி இறுதியாகத் தாமென்றொருமுதல் இல்லாதவாறாகவே இறந்தொழிந்துபோகின்றனர். இனி, நள்ளிருள் கழிந்த மூன்றாம்நாள் திடுமெனச் சிறுகீற்று வடிவாய்த்தோன்றும் பிறை உருவும் ஒளியும் வரவரப் பெருகிப் பதினைந்தாம்நாட் பெருவிளக்கத்ததாகி அந்நாளில் வானும் நிலனுந் தனது எழிலொளிப்பெருக்கில் முழுகி விளங்கத் தான் நிகரின்றி நிலவுதல்போலத், தமது முன்னைநிலை இன்னதென்றே தாமும் அறியாமற் பிறரும் அறியாமற்சடுதியில் மக்களுக்கு மகவாய்ப்போந்து பிறந்து உடலிலும் உணர்விலுஞ் செல்வத்திலும் வாழ்விலும் மிக மிகச்சிறந்து சிலர் பலர் சிலகாலந் தலைமை செலுத்துகின்றனரல்லரோ? இவ்வாறு திங்களின் தேய்தல் வளர்தல்களிலிருந்து அறியற்பாலனவாகிய மக்கள்வாழ்க்கையின்

இயல்புகளை **உறையூர் முதுகண்ணன்சாத்தனார்** என்னும் பழைய நல்லிசைப்புலவர்,

"எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி!
தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து
வல்லாராயினும் வல்லுநராயினும்
வருந்திவந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி, அருள் இலர்
கொடாமை வல்லர் ஆகுக!
கெடாத துப்பின் நின்பகை யெதிர்ந்தோரே" (புறநானூறு, உஎ) என்னுஞ்செய்யுளிற் 'சோழன் நலங்கிள்ளி' என்னும் வேந்தனுக்கு எடுத்தறிவுறுத்தி அதனைப்பாடியிருக்கின்றனர். நிலையாச் செல்வவாழ்க்கையை நிலையெனமருண்டு தம்மைமறந்து இறுமாந்தொழுகுஞ் செல்வரெதிரே உண்மை பேசுதற்கஞ்சி அவரது முகத்தெதிரே இனிக்கப்பேசி, அவர் வீசியெறியுங்காசைப்பெற்று மகிழும் பிற்றைஞான்றைப்பொய்ப்புலவர்போலாது, முதுகண்ணன் சாத்தனார் எத்துணைத் திட்பமான நெஞ்சமுடன், மாவேந்தனை சோழன் நலங்கிள்ளிக்கு, நிலையில்லா மக்கள்வாழ்க்கையின் தன்மையினையும், அதுகொண்டு நிலையுள்ள அறஞ்செய்யும் வண்மையினையுந் திங்களின் இயக்கத்தில் வைத்து நன்கு அறிவுறுத்தி மேலைத் தனிச்செந்தமிழ்ப்பாவினை அருளிச்செய்திருக்கின்றார் பார்மின்!

மேற்காட்டியவாறு திங்கண்மண்டிலமானது இராக்காலத்தே புறத்துப்பரவிய இருளை இரித்துக் கண்ணறிவை விளங்கச்செய்து நமக்கு அழகிய காட்சியையும் அதனாற் பெருகியமகிழ்ச்சியையும் அளித்தல்போலவே, தேய்ந்துவளருந் தனது இயக்கத்தால் அது மக்கள் வாழ்க்

கையின் நிலையாமையினையறிவித்து அகத்தே பரவிய ஆணவவிருளைநீக்கி, என்றும் நிலையுதலுடைய இறைவன்றன் பேரின்பப்பெருவாழ்வைப் பெறுதலில் நமக்குக் கருத்து விளங்கி ஈடுபட்டு மேலெழுமாறுஞ்செய்கின்றதன்றோ? ஆதலால், முழுவெண்டிங்களை இறைவனது அருளொளி முனைத்துவிளங்கும் இடமாகக்கொண்டு, அதனைப் புறத்தே வான்வெளியிலும், நமதகத்தே புருவத்திடைவெளியிலும் புறக்கண் அகக்கண்களால் விளங்கக் கண்டு தொழுதல் இன்றியமையாததொரு கடவுள் வழிபாடாமென்க. இதுபற்றியே நம் பண்டையாசிரியரான **பாரதம்பாடிய பெருந்தேவனார்,**

"பிறைநுதல் வண்ணமாகின்று, அப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும்படுமே;
எல்லா உயிர்க்கும் ஏமமாகிய
நீரறவு அறியாக் கரகத்துத்
தாழ்சடைப்பொலிந்த அருந்தவத்தோற்கே" என்று

புறநானூற்று முகப்பிற் பிறைமதியை இறைவன் திருமுடிமேல் வைத்துத் தொழுதல்செய்வாராயினர். அப்பண்டையாசிரியர் வழிவந்தநாமும் அந்நன்னெறிகடைப்பிடித்துத் திங்களைப்போற்றுவாமாக!

சந்தனமரம்

சந்தனமரமானது பழைய செந்தமிழ்நூல்களிற் சந்து, சாந்தம், ஆரம், மலயம்முதலான பல பெயர்களால் வழங்கப்படுகின்றது. இந்நான்கிலுஞ் சாந்தம் என்னுஞ் சொல்லே ஆண்டு மிகுதியாய் வழங்காநிற்கின்றது. சாந்தம் என்னுஞ்சொல்லே சாந்து, சந்து எனக் கடைக்குறைந்தும் அதனொடு முதற்குறுகியும் வழங்குகின்றது. சந்து என்பதே பிற்காலத்திற் சிலவெழுத்து மேலுங்கூடிச் சந்தனம் என மிகுதியாய் வழங்குதலைக்காண்கின்

றோம். மலயம் என்னுஞ்சொல் தமிழ்நாட்டின் தெற்கேயுளதாகிய பொதியமலைக்கே சிறப்புப்பெயராக வழங்கிவருதலால், அம்மலைக்கண் நிரம்பிவளருஞ் சந்தனமரமும் 'மலையம்' எனப் பெயர்பெறுவதாயிற்று. இம்மலையம் என்னும் பண்டைத்தமிழ்ச்சொல்லே சந்தனமரத்திற்குப் பெயராக வடமொழி **அமரநிகண்டு** கூறுதலை உற்றுநோக்குங்காற், சந்தனமரம் தமிழ்நாட்டிற்கே உரித்தாவதென்பதும், அதனாற் சந்தனம் என்னுஞ்சொல்லும் அதற்குப்பெயர்களாக மேலெடுத்துக்காட்டிய ஏனைப் பழஞ்சொற்கள் நான்குந் தனிச்செந்தமிழ்ச்சொற்களேயாமென்பதும் நன்குபெறப்படாநிற்கும்.

இனிச், சந்தனமரமானது தெற்கேயுள்ள பொதியமலையில் மிகுதியாய் வளர்வதாயிருந்தாலும், மற்றையிடங்களிலுள்ள மற்றைமலைகளிலும் மலைநாடுகளிலும் அது சிறுகவாயினும் வளர்கின்றது. இது மிகஉயரமாக வளர்வதன்று. நாரத்தைமரத்தினளவே உயர்வது. இதனுடைய இலைகள் வேற்படையின் முனைத்தகட்டைபோன்ற வடிவமைந்துள்ளன. இதன்மரம்முற்றிக்காழ்ப்புக்கொள்ளுமாறும், காழ்ப்புக்கொண்டநடுக்கட்டைமிகுந்தமணம் வீசுகின்றது. சந்தனப்பூவும் மிகுமணம்வாய்ந்தது. சந்தனமரத்தின் கட்டைகள் மஞ்சள்நிறம் உடையனவும், வெண்மைநிறம் உடையனவும், சிவந்தநிறம் உடையனவும் என மூன்றுதிறமாயிருக்கின்றன.

சந்தனக்கட்டைகளை அரைத்து, அரைத்தெடுத்த தேய்வையைத் தனியாகவும், பனிநீர் இலவங்கம் ஏலம் கருப்பூரம் சாதிக்காய் தக்கோலம் முதலான மணப்பொருள்கள்கூட்டிய கலவையாகவும் எடுத்துக், கட்டியாகவோ கரைந்தகுழம்பாகவோ இறைவன் திருவுருவத்திற்குச்சாத்துகின்றார்கள். சந்தனத்தூளையுஞ் சந்தனச்சீவுகளையும், அகில் அகரு பச்சிலை சிச்சிலிக்கிழங்கு கிளிமூரற்பட்டைமட்டிப்பால்பாற்சாம்பிராணிமுதலான

மணப்பொருள்களுடன் கலந்துஇடித்து, இடித்த தூளைத் திருக்கோயில்களில் இறைவனெதிரே நெருப்பிலிட்டுப் புகைக்கின்றார்கள். இப்புகையானது நறுமணம்பரப்பித் தொழவருவார்க்கு மகிழ்ச்சியளித்து, மனத்தை அமைதிப்படுத்தி, அவரது நினைவையும் ஒருமுகப்படுத்தி அதனை இறைவன் றிருவுருவத்திற்பதித்து, அவரதுநெஞ்சம் அன்பிற்றதும்பி நிற்குமாறுஞ்செய்கின்றது. அதுவேயுமன்றி, மக்கள் நெருக்கடியாலும், அவரதுடம்பினின்று வெளியாகும் வியர்வை நச்சுக்காற்றுகளாலும், நோய்கொண்டாரிடமிருந்து பன்னூறாயிரக்கணக்காய்ப் புறத்தேவரும் நச்சுப்புழுக்களாலுங் கோயில்களின் உள்ளுள்ளகாற்று நஞ்சாகுதலால், அங்கே புகைக்கப்படுஞ் சந்தனம் முதலான நறுமணப்பண்டங்களின் புகை, அந்நச்சுப்பூச்சிகளையும் நச்சுக்காற்றையும் அப்புறப்படுத்திக், கோயிலையுங் கோயிலினுள் வணங்கவருவாரையுந் தூய்மைசெய்து, அவ்விடத்தை நறுமணங்கமழச்செய்கின்றது.

திருக்கோயில்களின் மட்டுமேயன்றிச், சிறப்புநாட் கொண்டாடுங்கழகங்களிலுந், திருமணம் நடத்தும் இல்லங்களிலும், மக்கள் நறுவியமலர்களும் மலர்மாலைகளும் நிறைத்தலுடன், சந்தனமும் பனிநீருந் தெளித்து அவ்விடங்களை நன்மணங்கமழச்செய்தலால், அங்குக்குழுமுவார்க்கு மனக்களிப்புண்டாதலே யல்லாமல், மனநல உடல்நலங்களும் உண்டாகாநிற்கின்றன. மன்றலுக்கு (கல்யாணத்திற்கு)த் தமிழில் 'திருமணம்' என்னும் பெயர் அமைந்தது, அஃது அயருங்காலத்து எங்குமுள்ள மணப்பண்டங்கள் எல்லாம் அஃதயருமிடத்து ஒருங்கு வந்து தொகுதல்பற்றியேயாம். இங்ஙனமெல்லாம் உடம்பும் உள்ளமும் ஒருங்கே குளிர்ந்து தூயவாய்த்திகழ்தற்குப் பேருதவிசெய்யும் மணப்பண்டங்களுட் சிறந்ததாகிப் சந்தனம் இல்லாத ஒருகொண்டாட்டமுந் திருநாளுந் தமிழ்நாட்டில் எங்குமே இல்லை. இத்துணைச் சிறந்த

தாகிய இச்சந்தனம் இயற்கையில் இத்தமிழ்நாட்டுக்குக் கிடைத்தாற்போல வேறுநாடுகளுக்குக் கிடையாமையும் நினைவிற் பதிக்கற்பாற்று.

சந்தனக்கட்டைகளினின்று வடித்தெடுக்கப்படும் நெய் மிகுமணங்கமழ்வது. மகிழ், முல்லை, மருக்கொழுந்து, மலைப்பச்சை, வெட்டிவேர் முதலியவைகளினின்று இறக்கப்படும் மணநெய்யெல்லாஞ் சந்தனநெய்யிற்கலந்தே செய்யப்படுகின்றன. தன்னிற்கலக்கப்படும் இம்மணநெய்களின்மணம் இல்லையாய்ப்போனபின்னுஞ், சந்தனநெய் தன்மணங்குறையாதாய்க் கமழ்வதைப்பார்க்கலாம். சந்தனநெய் நறுமணங் கமழுந்தன்மையொன்று மட்டும் உடையதன்று. ஆண் பெண் பாலார்க்குக் குறிகளைப் பற்றிவருங் கொடுநோய்களையுந் தீர்க்குந் திறம் வாய்ந்தது. உப்புப் புளி காரம் நல்லெண்ணெய் கடுகு பாகற்காய் காப்பிவிதை தேயிலை கோக்கோ முதலானவைகளை உணவாகவுங் குடிநீராகவும் அருந்தாமல், இச்சந்தனநெய்யை நாற்பதுநாட் சிறிது சிறிதுபருகிச் சிறந்த உணவுப்பண்டங்களையே யருந்திவரிற் குறிவழிவந்த நோய்கொண்டார் அந்நோய் வேரோடு அறப்பெற்றுத், தமதுடம்பு பசும்பொன்னென மிளிரப்பெறுவர். இல்லத்தினுள்ளே முடைநாற்றந் தரும் அழுக்குகளை அகற்றி, இச்சந்தனநெய்யைச் சில துளிகளாக நெருப்பிலிட்டுப் புகைத்தாலும், வெந்நீரிற்கலந்து தெளித்தாலும், அது வீட்டிலுள்ள நச்சுப்பூச்சி நச்சுக்காற்றுகளை அகற்றி உடம்புக்கு நலந்தருவதல்லாமலுந், தனது நறுமணத்தால் உள்ளத்திற்கு மகிழ்ச்சி தந்து அதற்குப் பெரியதோர் ஆறுதலையும் பயக்கும்.

இத்துணைச்சிறந்த சந்தனமரங்களைப் பண்டைத் தமிழரசர்கள் செல்வர்கள் தம்முடைய மலைகளில் நிரம்ப வைத்துவளர்த்து, அவற்றின் குழம்பைத் தம்முடைய உடம்பில் மிகுதியாய்ப் பூசிவந்தனரென்பதும், அவர்

தம் மகளிர்கள் தமது மார்பின்மேற் சந்தனக்குழம்
பாற் கோலம் வரைந்துகொள்வரென்பதூர், அங்ஙனம்
வரையுங்கோலந் 'தொய்யில்' எனப் பெயர் பெறுமென்ப
தூம் பழையசெய்யுட்களால் இனிதுபுலனாகின்றன.

ஈகையிற்சிறந்த **வேள்பாரி** என்னும் மன்னனுக்
குரிய 'பறம்பு' என்னும் மலையிடமெங்குஞ் சந்தனக்
காடுகளே செறிந்திருந்தனவென்றும், அம்மலைமேல்உறை
யுங் குறத்திப்பெண்கள் அங்குள்ள சந்தனமரக்கட்டை
களையே விறகாகமாட்டி அடுப்பெரித்தனரென்றும் நல்லி
சைப்புலவரான **கபிலர்** அம்மன்னன்மேற்பாடிய,

"குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆரமாதலின் அம்புகை அயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத்தவழும்
பறம்பு பாடினர் அதுவே அறம்பூண்டு
பாரியும் பரிசிலர் இரப்பின்
வாரேன் என்னான் அவர்வரை யன்னே" என்னும்
அருந்தமிழ்ச்செய்யுள் (புறநானூறு, க0அ) அறிவித்தல்
காண்க

பழைய தமிழ்நூல்களில் 'எருமையூர்' என்றும்,
இஞ்ஞான்று 'மைசூர்' என்றும் வழங்கப்படுவதாகிய நடு
நாட்டின் மலைகளில் ஏராளமாகப்பயிராகுஞ் சந்தனமரங்
களின் கட்டைகள் நனிமணங்கமழ்வனவாயும், அழுத்
தம் வாய்ந்தனவாயும் இருக்கின்றன. இக்கட்டைகளில்
மிக அழகிய தெய்வவுருக்கள் விலங்குகளின் வடிவுகள்,
பூங்கொடிகள் செடிகள் மரங்கள் முதலியவற்றின் காட்சி
கள் பெரிதும் வியக்கத்தக்கவாறாய்க் கம்மர்களாற் செதுக்
கியமைக்கப்படுகின்றன. சந்தனக்கட்டைகளிற் கொத்
திய இவ்வுருக்களில் திறமானவைகளைச் சென்னையி
லுள்ள **'கண்காட்சி நிலையத்'**திற்குச் செல்வாரெல்லாருங்
கண்டு மிகவும் இறும்பூது எய்துகின்றனர்.

இனி, வேனிற்காலத்தில் வெங்கதிர் வெப்பம் முதிர்
ந்து அழற்றம்போது இத்தென்றமிழ்நாட்டவர், சந்தனத்
தை அரைத்து, அவ்வரைப்பைத் தனியாகத் தண்ணீரிற்
கலக்கியேனும், மணக்கூட்டுகளுடன்சேர்த்துப் பனிநீரிற்
குழப்பியேனும் உடம்பின்மேற் பூசிக்கொள்ளுகின்றார்
கள். அவ்வாறு செய்யவே, அழற்சியால் உடம்பெங்கும்
நிறைந்த வேர்க்குருவென்னுஞ் சிறுபருக்கள் உதிர்ந்து
போகின்றன.

இங்ஙனமெல்லாஞ் சந்தனமரமானது மக்களுக்கு
உடல்நல மனநலங்களைத் தருஞ் சிறப்பினதாயிருத்தல்
கண்டே, மேல்நாட்டில் உள்ள அரசர்களுஞ் செல்வர்
களும் பண்டைக்காலத்திருந்தே இதன்கட்டைகளை இங்
கிருந்து தம்முடைய மரக்கலங்களில் வருவித்து, அவற்
றைப்பயன்படுத்திவந்தார்கள். இற்றைக்கு மூவாயிர ஆண்
டுகளுக்குமுன் மேனாட்டிற் செங்கோல் ஓச்சிய **சாலமன்**
என்னும் வேந்தன், தன்னுடைய கப்பல்களை அடுத்
தடுத்து இத்தமிழ்நாட்டிற்குவிடுத்து, இங்கிருந்து ஏற்று
வித்து வருவித்த அருஞ்சரக்குகளிற் சந்தனக்கட்டை
அகிற்கட்டைகளுஞ் சொல்லப்பட்டிருத்தலை நினைவுகூர்
தல்வேண்டுமென்பது.

காலதியன் கிரிசெலாள் கதை

மேற்கே இத்தாலியா தேயத்திற் புகழோங்கிய குறு
நிலமன்னர்களில் மிகச்சிறந்தவனாகிய 'காலதியன்' என்
பான் ஒருவன் இருந்தனன். அவன் இளைய அகவை
யினனேனும், மனைவிமக்கள் இல்லாமையினாலும், மணஞ்
செய்துகொண்டு மக்களைப் பெற்று இன்புறல்வேண்டும்
என்னும் எண்ணம் இல்லாமையினாலுந், தனதுகாலத்தை
வேட்டமாடுவதிலும், வல்லூறு என்னும் பறவையைக்
கொண்டு பிறபுட்களைப்பிடிப்பதிலுமே கழித்துவந்தான்.

இவன் மணஞ்செய்துகொள்ளாதிருத்தலை அறிவுடைமையாகச் சிலர் புகழ்ந்துபேசினாலும், அவனது செங்கோல் நீழற்கீழ் வாழுங் குடிமக்கள் அவன் அவ்வாறிருத்தலை விரும்பாராய், அவன் தனக்குத்தக்காள் ஒருத்தியை மணங்கூடல் வேண்டுமென்றுந், தன்னரசுக்கு உரிமையாக ஒருமகன் இல்லாது அவன் இறத்தல் ஆகாதென்றும், நல்லபெற்றோர்க்கு மகளாய்ப்பிறந்த ஒரு நங்கையைத் தாமேதேடியாராய்ந்து அவற்கு மணம் பொருத்தினால் தமது ஆவல் நிறைவேறவதுடன் அவற்கும் மிகுந்த மனவமைதி யுண்டாகுமென்றும் வற்புறுத்தித், தமது கருத்துக்கு இணங்குமாறு அவனை வேண்டிக்கேட்டனர்.

அவரது வேண்டுகோளைச் செவிமடுத்த அம்மன்னன்: "அருமைநேயர்காள், யான் தலையிடுதற்கு விரும்பாத ஒருநிகழ்ச்சியில் என்னைத் தலையிடுமாறு நெருக்குகின்றீர்கள். ஆனால், ஓராண்மகனோடு அவனிருக்கும் நிலைமைகட்கெல்லாம் இசைந்து அவனோடு ஒத்துவாழ்க்கைசெலுத்தத்தக்க ஒருபெண்மகள்கிடைத்தல் அரிதரிது. கணவனொடு மாறுகொண்டு நடக்கும் மனைவிமாரையே எங்குந் தொகைதொகையாய்க் காண்கின்றோம்! உலகத்திலுள்ள எல்லாத்துன்பங்களிலுங்கொடியது, தனக்கு இசையாத ஒருமனைவியுடன் கூடியிருக்கப்பெறுதலேயாம்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை."

தாய்தந்தையரின் நலத்தைக்கண்டு நல்ல ஒருமாதைத் தேடித்தருவேம் என நீங்கள் பகர்வதும் பொருத்தமாயில்லை; ஏனென்றால், நீங்களாவது யானாவது பெற்றோர்களின் மறைந்த மனவியற்கையைக் காண்டல் இயலாது. அல்லதவர்களின் அவ்வியற்கையை நாம் அளந்தறிதல்கூடுமென்றே வைத்துக்கொண்டாலும், புதல்வியர்

தம் தாய்தந்தையரின் இயற்கை தங்கட் பதியப்பெறாதிருத்தலையும், அவர் தத்தம் இயற்கைப்படியே யொழுகுதலையும், ஆங்காங்கு ஒவ்வொருநாளுங் காணப்பெறுகின்றனம் அல்லமோ?

"என்றாலும், மணவாழ்க்கை என்னுஞ் சங்கிலியால் யான் பிணிக்கப்பெறுதல்வேண்டுமென நீங்கள் பெரிது விரும்புதலால், யான் நுங்களது வேண்டுகோளுக்கு இணங்குதல்செய்கின்றேன். ஆயினும், இந்நிகழ்ச்சியில் நாம் எதிர்பார்த்தவண்ணம் நேராதாயின், அதுபற்றிக் குறை சொல்லப்படவேண்டியவர் என்னைத்தவிரப் பிறர் உளராகாமைப்பொருட்டு, யான் என்னுடைய கண்களைக்கொண்டே ஒருமணமகளைத் தேடிப் பெறல்வேண்டுமன்றிப், பிறருடைய கண்களைக்கொண்டு அவளைத்தேடியடைதல்கூடாது. ஈதெனதுஉறுதி. நல்லது, யான்தேடிப் பெற்ற மனையாளை நீங்கள் பெருமைப்படுத்தி நன்குமதித்தல்வேண்டும். அங்ஙனஞ்செய்திலீராயின், அது நுங்களுக்கொரு பெருங் குறைபாடாவதுமன்றி, எண்ணம் இல்லாதிருந்தும் நுங்கள்வேண்டுகோட்படி ஒருமங்கையை மணந்துகொண்ட எனக்கும் ஒருபெருவருத்தத்தினை விளைத்தீராவீர்!" என அவர்கட்கு விடைமொழி கூறினன்.

அச்சொற்கேட்ட அக்குடிமக்கள், எங்ஙனமேனுந் தம்மன்னன் மணஞ்செய்துகொண்டால் அதுவே தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகும் என்றனர்.

பின்னர்ச் சிலநாட்கள்சென்றன. சென்றபின், அம்மன்னனது மாளிகைக்கு நெடுந்தொலைவில்லாததான ஒரு சிற்றூரின்கண் உயிர்வாழ்ந்த ஓர் ஏழைக்குடியானவன்றன் மகள் புறத்தே அழகிலும் அகத்தே மனநலங்களிலும் மிகச்சிறந்தவளாக அம்மன்னனுக்குக் காணப்பட்டாள்; அவளுடன் தான் இனிதுவாழக்கூடுமென்பது அவனுக்குத்தோன்றியது. ஆகவே, அம்மன்னன் மேலும் ஆராய்

தலையொழித்து, அவளை மணஞ்செய்துகொள்ளும் ஒரே தீர்மானத்துடன், அவள் தந்தையுடன் சூழ்ந்து, அவனை அதற்கு உடன்படுத்திக்கொண்டனன். அதன்பின் அவன் தான் அரசுசெலுத்தும் நாட்டின்கண் உள்ள குடிமக்களையுஞ்செல்வர்களையுந் தனது அரண்மனைக்கு ஒருங்குவருவித்து, மணஞ்செய்தற்குத் தக்கதொருநாளையும் அதற்குரிய எல்லாச்சிறப்புகளையுஞ் செய்துவைத்து, மணமகளைக்கொணர்தற்கு வந்தவர்கள் எல்லாருடனுங் குதிரை யூர்ந்து அவளிருக்குஞ் சிற்றூர்க்குச் சென்றான். சென்று அவள் இருக்குங் குடிலில் அவள் தந்தையைக் காண்டற்குத் தான் ஊர்ந்துபோந்த புரவியினின்றும் அவன் இழிந்தபொழுது, அம்மங்கைதான் தண்ணீர்முகக்கச்சென்ற கிணற்றினின்றுந் தண்ணீர்க்குடங்கொண்டு மற்றைப்பெண்களுடன் திரும்பி அக்குடிலுக்கு விரைந்து வருதலைக்கண்டான். கண்டதும் அவன் அவளை நோக்கி, "கிரிசெலா, நின்தந்தை எங்குளார்?" எனவினவினன். அதற்கு அவள் நாணத்துடனும் பணிவுடனும், "அருள்மிக்க அரசர்பெருமானே, அவர் வீட்டிலேதான் இருக்கின்றார்." எனவிடைபகர்ந்தனள்.

அதுகேட்டு அம்மன்னன் தன்னுடன் போந்தவர்களை அக்குடில்வாயிலில் நிறுத்தித், தான்மட்டும் அதனுட்சென்று, அங்கிருந்த அவடன்றந்தையை நோக்கி, "ஐய, நுங்கள் முன்னிலையிலும் என்னுடன்போந்தார் முன்னிலையிலும் நுங்கள் புதல்வியை யான் சில கேட்டுத் தெளியவேண்டும்" எனப்புகன்று, அவளை அக்குடில்வாயிற்புறத்தே கொணர்ந்து நிறுத்தி, அங்கு நாணமும் அச்சமும்மிக ஒருபக்கத்தொதுங்கிநின்ற அம்மடந்தையைப் பார்த்து, "அழகிய கிரிசெலா, யான் நின்னை என் மனைவியாகச்செய்துகொண்டால், யான் சொல்வனசெய்வனவாகிய எல்லாவற்றிலும் நீ நின்னாற்கூடியமட்டும் யான் உவக்கும்படி நடந்துகொள்வையா? இன்னும், நீ அமை

tinquished linguist Prof. Max Muller says: "We read of missionaries in Central America who attempted to write down the language of savage tribes, and who compiled with great care a dictionary of all the words they could lay hold of. Returning to the same tribe after the lapse of only ten years, they found that this dictionary had become antiquated and useless. Old words had sunk to the ground and new ones had arisen to the surface; and to all outward appearance the language was completely changed."* It must be obvious then how important it is for a civilized people to keep their language intact and maintain its purity to an utmost extent. Still, however civilized a people may be, all the persons who compose it cannot exert themselves to keep their language pure and fixed, since laziness is an inborn principle in many which renders them indifferent to a correct pronunciation of words and sentences. And in close association with this principle of laziness which inwardly undermines the structure and stability of a language, another equally baneful, springing from the desire for imitation, comes rather outwardly from the contact of two peoples speaking or using two different languages, and induces them to import the words and phrases of the one into the other. Unless the mischief played by these two evil principles is checked strongly and in time, a language cannot live long but will quickly pass away and with it all scope for culture and civilisation will also pass away.

Now where can we look for a potent power to come from and check the operation of the two evils but from the small but active and intelligent section of a people which forms the centre radiating knowledge and civilisation all around. If a people could be so fortunate, like the

* The Science of Language, 1899, Vol. I, p. 66.

Tamilians or the Egyptians, as to possess early among them an intelligent class who, by creating a literature and committing it to writing, made a persistent effort to check the decay of their language and the promiscuous mixture of foreign elements in it, their language, theirs alone, would acquire a vitality that would keep it permanently living. But for the creation and existence of a large and rich literature possessing a many-sided interest for its people, it would not have been possible to arrest the change and decay of a language. Prof. Sayce pertinently well observes: "Destroy literature and facility of intercommunication, and the languages of England and America would soon be as different as those of France and Italy."*

When one grasps the importance of this circumstance which controls the fate and destiny of a language, it would become clear to his or her mind why Tamil has lived so long and still continues to live in all its youthful vigour, even after such cultured languages of high antiquity as the Egyptian, the Accadian, the Assyrian, the Hebrew, the Aryan and so on have ceased to exist. So far as we can compute on historical grounds, it is for more than ten thousand years that the Tamil language is being spoken and written. And to invigorate its constitution in addition to its innate vitality it possesses a vast, varied, original, useful and highly interesting literature produced from 5000 B. C. up to the present times. The great and momentous fact must be borne in mind that, of the few cultivated languages of the ancient world, Tamil alone, as I just pointed out, is still living in all its richness and youthful vigour, all others of the modern world being only five or six hundred years old and even among these, cxcept some European languages, few own original literatures as pure Tamil.

* The Science of Language, 1900, Vol. I, p. 210.

To many it might look a surprising circumstance that Tamil should outlive all other ancient languages, that it should still display so much virility as argues for its perennial existence. But the secret is not far to seek, although it has eluded the notice of even erudite scholars. The words, phrases and sentences of Tamil require but little effort on the part of the speaker to utter them properly. The sounds of each letter and word issue forth from the throat and mouth normally and naturally, giving no trouble whatever to the speaker. That all its twelve vowels and eighteen consonants constitute the only natural and normal sounds that could come out from the human voice with the least effort, can be shown clearly by inquiring into the phonetic and physiological laws that lie at thir basis; but in a short preface like this it is not possible to enter into that profitable study. We have already shown that laziness in pronunciation forms one of the main factors that lead to the constant change, decay and death of languages. But in the case of Tamil, however lazy a man might be, he cannot pronounce its words so badly as to efface their identity altogether. On the other hand, the words themselves, without requiring much effort, flow out from him like the rhythm of a sweet tune issuing forth from the strings of a harp touched by summer breeze. For the Tamil language does not possess such hard consonants, hissing sounds and aspirates as are possessed by Sanscrit, Hebrew and other cognate languages. It is this distinct mellifluous character of its sounds that has preserved and still preserves Tamil from any disastrous change and decay. To this day even the illiterate Tamil peasants understand the classical poetic language of the Thirukkural that was composed at the beginning of the Christian era. When I had been at Jaffna during my lecturing tour, I was struck with wonder

when I heard from the lips of its people many pure Tamil words used in ancient Tamil classics, but which have fallen into disuse in Madras and suburban cities. Even in big cities like Madras where all sorts of people speaking all sorts of languages mix and mingle together, all those who speak Tamil speak it purely whether they be the born Tamils or others who have adopted it merely for social intercourse or business purposes. In the colloquial Tamil scarcely one per cent of either Sanscrit or other foreign words mixes.

But the mischief that affects it badly comes mainly from the circle of English-knowing brahmin and non-brahmin officials, who speak neither pure Tamil nor pure English, but mix the two together so badly and ridiculously that neither a Tamilian nor an Englishman understands their language but turns aside with disgust. Besides introducing into their spoken and written Tamil many an English word and phrase, nay even whole sentences, the brahmins and their followers import into it Sanscrit and Hindustani terms also. This "constant degradation of language" in the words of Pater, "by those who use it carelessly," at present affects Tamil so wholly by the slipshod fashion in which it is handled by the so-called educated people. Whether you speak English, or whether you speak Tamil or any other language, you must learn to use it in such a way as to make your ideas quite intelligible to the people who are born and bred in that language. The standard by which one ought to measure the nature and use of a language must be the extent of its usage among the largest portion of its people in the daily intercourse of their life. As the educated section forms a very small minority of almost all the people in the world, especially in this country not only is it an inconsiderable

part, but it also concerns itself less about the welfare of the masses than its own, the present fashionable mode of their easy talk cannot, with any propriety, be taken as the standard for using a language like Tamil which has been cultivated for more than fifty centuries and is spoken still by more than twentyone millions in southern India and Ceylon alone. As days advance with the spread of English education, the gulf between the educated and the uneducated Tamils also widens, their being little understanding between them and little sympathy with each other. The root-cause of this may, by all careful observers, be traced to the inadequate instruction imparted in Tamil to students reading from the High School to College classes.

The object of the following treatise therefore is to remedy this defect at first by feeding properly the acquisition of the knowledge of Tamil at its very root, and secondly by acquainting the young mind not only with a knowledge of actual facts but also with practical moral maxims clothed, of course, in the attractive allegorical form called the fable.

To attain my first object the whole work is written in pure but simple Tamil, only here and there so interspersed with the words and phrases taken from the classical Tamil literature, as to make their meaning easily understood by their context and help the students in this way early to store in their memory a considerable number of fine and beautiful words and expressions they will frequently meet with in their later course of higher Tamil studies. Although I have in this prose work scrupulously avoided quoting any poetic piece, yet the synonyms given at the opening of each original essay and the classical terms and expressions used here and there, will, I hope,

greatly contribute to a sound knowledge of Tamil, of its structure and peculiarities, and aid the student to understand any poetical composition also to some extent. The manner of writing employed in this book, besides increasing the student's knowledge of Tamil, will also enrich his Tamil vocabulary and serve him in good stead to communicate easily to his countrymen the ideas he has imbibed from the various branches of English learning.

My second object is to strike out a new path in the treatment of subjects, keeping in view the wide and amazing extension of knowledge achieved by the European nation, while still clinging to some extent to the ancient mode of classifying subjects as laid down in the great Tamil grammar and rhetoric the Tholkappiam. Almost all the Tamil texts now in use never deviate from the beaten track of repeating the mythical stories of the Rāmayana and the Mahabharatā, as if the incidents related in them had been actual historical occurrences and of omitting for the most part real daring adventures and soul-inspiring deeds of the heroes who actually existed in countries other than India. By this blind belief and persistent treatment of worn-out myths, by this wanton neglect doggedly maintained towards the actual greatness of the heroes of other countries, these Tamil texts, at the very time of its genial growth, blunt the historic sense of the pupils and breed in its stead an undesirable credulity which never leaves them even after years of their excellent culture in English. I have, therefore, completely left out all kinds of Indian myths in this book and brought in mainly actual historical incidents and a few supernatural events related in the reliable works in English.

In rooting up blind belief and credulity from the mind of the young pupils, it is not my desire that they

should be taught to disbelieve completely all occurrenecs of a wonderful and supernatural claracter. On the other hand, it is my earnest wish that they should be instructed so as to acquaint themselves early not only with what occur ordinarily within nature and human nature, but also with those that occur rarely at fitful intervals within, near and beyond them, provided they belong to the class of cases proved by careful, intelligent and disinterested witnesses. Here too the students must be on their guard, lest they should fall into the error of extending their belief from one proved supernatural and superhuman case to many an unproved one. This careful cultivaticn of mind, while it is plastic, will tend to make it susceptible of receiving into it only those ideas that are true, real and wholesome, and free from deceptions and will conduct it ultimatey to a region where truth alone shines. For, greater than truth there is nothing to be attained by the human soul.

Finally, it is my sacred duty to emphasize the importance of diligently cultivating a pure Tamil style both in speaking and writing, for that alone could urge the student to stretch his vision over the vast domain of the very valuable old Tamil literature in search of new words and expressions which lie abundantly there and which will readily serve him to express his precious new ideas in Tamil without seeking the aid of any foreign tongue. The more one exercises his mind in expressing himself clearly in his own mother tongue, the more will his powers of concentration and expression increase, and the better can he serve his country, language and religion. Further, that each and every word of pure Tamil bears on its face the mark of elegant use to which it was put for more than six thousand years by the very intelligent and highly civilized forefathers of the Tamil people, that these words, instead

of becoming worn out and unfit for further use like the words of the dead languages, have, on the contrary, gained immense vitality and fresh life as times went on, every patriotic son of Tamil must impress on his mind indelibly. No filial son of Tamil can discard this priceless heritage of his own and go seeking after the aid of others that belong to those who bear no good will towards him, without degrading himself into beggary and bringing contempt on his great forefathers and on the great language they used and cherished with so much love. Dear sons of Tamil, awake from this negligent torpor, serve your mother with filial piety and sincere heart, and reinstate her in her once pure and undimmed glory!

Pallavaram,
25 th March, 1934

Vedachalam.

சட்டியில் எரிந்துகொண்டிருந்த நெருப்பு இப்போது குறைவாய் எரிந்தது; தாம் தூங்கச்சென்றபொழுது கிளர்ந்து விளங்கிய ஒளி இப்போது மங்கலாகிச் சிவந்தவெளிச்சத்தைச் சுவர்களிலும் மச்சிலும் படுவித்தது. அதே நிலைக்கதவண்டை அவ்வெளிச்சத்தின் நடுவே அவர்தந் தந்தையின்உருவம் மறித்தும் வந்துநின்றது. இம்முறை அதன் முகக்குறிப்பிலுஞ் செயலிலும் ஒரு வேறுபாடு விளக்கமாய்த் தோன்றியது. முன்னே அத்துணைத் தெளிவாய்க் காணப்பட்ட ஆவற்குறிப்பு மாறிக், கைவிட்ட துயரக்குறிப்பே இப்போது மிகுந்துகாணப்பட்டது. முன்னே உயர எடுத்து அம்மாணவரைத் தம்பால்வருமாறு அழைத்த கைகள் இப்போது அவரைப் பின்னே செல்லும்படி மெதுவாகஅசைத்துக் குறிசெய்தன. முன்போல் அது சடுதியிலே மறைந்துபோகாமல், அதன் உருவம் வரவர மங்கலாகிச் சுவரின்மேற்பட்ட செவ்வொளியிற் சிறிது சிறிதாக மறைவதுபோற் றோன்றியது.

அவ்வாறது மறைந்துபோயபிறகுதான் அவ்விளைஞர் தம்முடையகைகளை அசைக்க இடம்பெற்றார்; உடனே அவர் தமது கைக்கடிகாரத்தை இழுத்து, அப்போது நேரம் என்னென்று நோக்கினார். இரண்டுமணி அடிக்கப் பத்துநிமிஷங்கள் இருந்தன. அவர் உடனே தமது வீட்டுக்குச்செல்லத் தீர்மானஞ்செய்தும், அந்நேரத்தில் அங்குள்ளாரெவரையுந் துயிலினின்று எழுப்புவதும், வீட்டுக்குப்போக வண்டிபிடிப்பதும் இயலாதிருந்தன. தொலைவிலுள்ள ஒருநாட்டுப்புற ஊருக்கு இவ்விளைஞரின் தந்தையார் சமயகுருவாயிருந்தனர். இவர் சில கிழமைகளுக்கு முன் தம்தந்தையாரைப் பிரிந்துவருகையில் அவர் மிக்கதோர் உடம்பின் நலம் உடையராகவேயிருந்தனர்; அதனாலும், அவரைப்பிரிந்துவந்தபிற் கலவரங்கொள்ளத்தக்க செய்தியொன்றும் வந்திலாமையினாலும் இவர் தம் தந்தையைப்பற்றிப் பிறிதாக நினைக்க இடமேயில்லை. என்றாலும், அடுத்தடுத்துத்தோன்றிய அவ்வுருவத்திலும், இயற்கைநிகழ்ச்சிக்கு வேறாகத் தென்பட்ட அத்தோற்றத்திலும் ஏதேனும் ஓர் உண்மையிருக்கவேண்டுமென்பது அவருளத்திற் பதிந்ததாயினுந், தம்கண்களால் தாமே நேரிற் சென்றுகண்டால் அல்லாமல், தம் தந்தையார் செம்மையாய் உயிரோடிருக்கின்றாரென்பதைப்பற்றித் தமக்கு அமைதி உண்டா

காதென உணர்ந்தார். ஆகவே, அவ்விளைஞர் இருப்பவுந் தூங்க முயன்றிலர்; விடியற்காலத்தைக்கண்டதுந், தமது கல்லூரித் தலைமையாசிரியரிடஞ்சென்று, தாம் இரவிற்கண்ட நிகழ்ச்சிகளைச் சொல்லி, அவற்றால் தம்முள்ளத்தெழுந்த அச்சம் அகலுமாறு தாம் தமது வீட்டுக்குக் காலந்தாழாது உடனேசெல்ல விடை தருகவெனவேண்டி விடைபெற்றனர்.

மிகவிரைந்துசென்ற பயணத்தால் அம்மாணவர் நேற்றிரவிற்கண்ட நிகழ்ச்சிகளைப்பற்றிய நினைவின்வலிவு சிறிதுகுறையலாயிற்று. மாலைக்காலத்து நிழல் தோன்றுகையில் தந் தந்தையார் இருக்குந் தெருவின்முனைக்கு அவர்வந்துசேர்ந்தார்; தம் இல்லத்தவர் திடீரெனப்போந்த தமது வருகையைக்கண்டு எவ்வளவு திகைப்புக்கொள்வரென எண்ணினார்; ஆனால் அவர் வீட்டண்டைசென்றதும், அதன் சாளரத் திரைகள் தொங்கவிடப்பட்டிருத்தல் கண்டு உளந் திடுக்கிட்டார். மசங்கல் வேளையாயிருந்தாலும், அந்நேரத்து வெளிச்சத்தையுந் தந் தந்தையார் விரும்புவதுண்டாகையால், முற்றும் இருள்சூழ்ந்தாலல்லாமல் அவர் மெழுகுதிரி விளக்கேற்ற விடுவதில்லையே என்று அவ்விளைஞர் நினைக்கவே, அவருள்ளத்தெழுந்த நடுக்கமானது, அவர் சிறிதுநேரம் வரையில் வாயிற்கதவைத் தட்டவொட்டாமல் தடைசெய்தது. கடைசியாக அவர் மனத்தைத் தேற்றிக்கொண்டு கதவைத்தட்ட, வேலைக்காரன் ஒருவன் போந்து கதவைத்திறந்தனன். அவன் அவ்விளைஞர்க்குச் சிறுபருவந்தொட்டுத் தெரிந்தவன்; உடனே அவன் முகத்திற்றோன்றிய குறிப்பைக் கண்டதும் அம்மாணவர் கொண்ட அச்சம் மெய்யெனத்தோன்றியது.

அவ்வேவலன் “ஐயோ! தம்பி, நீங்கள் மிகவும் பிந்திப் போனீர்களே! நேற்றிரவே நீங்கள் வந்திருக்கலாகாதா! ஐயா போய்விட்டாரே! அவர் நோயாய்ப்படுத்ததுஞ் சொல்லியசொல்லெல்லாம் உங்களைப்பார்க்க அவர் எவ்வளவு ஆவல்கொண்டாரென்பதே. நேற்றிரவு பத்துமணிக்குத்தான் அவர்க்கு இசிப்பு உண்டாயிற்று; அஃதுண்டாகி அரைமணிநேரங் கழித்து, அவர் சிறிதுபேசக்கூடியவர் ஆனதும், அவர் முதலிற்சொன்னது: ‘என் மகனைவருவியுங்கள்; இன்னும் ஒருகால் என்மகனை நான்பார்க்க வேண்டும்.’ என்பதே. பொழுதுவிடிந்ததும் ஓர் ஆளை விடுப்ப

தாக நாங்கள்சொல்லினோம்; ஆனால், நாங்கள் சொல்லியதை அவர்கேட்டதாகத் தெரியவில்லை; ஏனென்றால், அவர் உணர்விழந்து பின்னேசாய்ந்துவிட்டார். மறுபடியும் பதினொன்றே முக்கால்மணிக்கு அவர் சிறிதுநேரம் உணர்வுற்றெழுந்தார்; எழுந்ததும் அவர் சொல்லியதெல்லாம், ‘என்மகன் இப்போது இங்கே இருக்கவேண்டுமென்று யான் எவ்வளவு ஆவல்கொள்கின்றேன்!’ என்பதேயாம். அதன்பிறகு அவர் இறந்துபோகுந்தறுவாயில்—அப்போது இரண்டுமணியடிக்கப் பத்துநிமிஷங்கள் இருந்தன. அவர் தம்முடைய கண்களைத் திறந்து, மிகுதியாய்ப் பேசுதற்குக்கூடாதிருந்தாலும், எங்களையெல்லாம் இன்னாரென்று தெரிந்துகொண்டவராய் மெல்லப்பேசியதாவது: ‘நான் போகின்றேன்; இன்னும் ஒருகால் என் அருமைமகனைக்கண்டு பேசவிழைந்தேன்; ஆனால், அவனைக்காணும்வரையில் நான் உயிர்த்திரேன்.’ என்பதேயாகும் உடனே, அவர் தூக்கத்திற்செல்வார்போல் மிகவும் அமைதியாகவே உயிர்விட்டனர்.” என்று கண்ணீர் சிந்தியபடியாய்ச் சொன்னான்.

பாருங்கள்! உண்மையாக நேர்ந்த இத்துயரநிகழ்ச்சியில், அக்கல்லூரிமாணவரின் தந்தையார் தாம் பிணிப்பட்டுப் படுத்த இரவிற் பத்துமணிக்குப்பிற் குறிப்பாய்ப் பத்தரைமணிக்கும், அதன்பிற் பன்னிரண்டுமணிக்கும், அதன்பின் இறக்குந்தறுவாயில் இரண்டுமணியடிக்கப் பத்துநிமிஷங்களுக்கு முன்னுந் தம் மகனைப் பார்த்தற்கு விழைவுற்று உணர்வுகூடிய மூன்றுமுறையிலும், தொலைவிற் கல்லூரிவிடுதியிலிருந்த அவர்தம் மகனார்க்கு அந்நேரங்கள் தவறாமல் அவர்தம் ஆவிவடிவங் கட்புலனாகி அவரை இருமுறை தம்மாட்டுவருமாறு அழைத்து, மூன்றாம்முறை அம்மகனார் அதனைத் தெரிந்து வாராமைகண்டு, உளந்தளர்ந்து, அவரைப் பின்னே போகுமாறு கைக்குறிகாட்டினமை வியக்கற்பாலதொன்றாயிருக்கின்றதன்றோ? அவர் அங்ஙனம் மூன்றுமுறை தம்மகனார்க்கு முன்னே தோன்றியது ஆவிவடிவா? அல்லது நினைவுவடிவா? என்று ஆராயற்பாற்று. அஃது அவரது ஆவிவடிவேயாயின், அவர் தமது பருவுடம்பை நீத்தபின்னன்றி அதுதோன்றுதல் இயலாது. மற்றஃது அவரது நினைவுவடிவேயாயின், அஃது அவ்வாறுதோன்றுதல் இயலும். அவர் மூன்று

முறையுந் தம்மகனைப்பார்க்கவிழைந்து நினைத்தது உயிரோடிருக்கையிலேயே யாகையால், அவரது நினைவின் உறைப்பே அவரது உருவினை அவர்தம் மகனார் கட்புலனெதிரே காட்டுவதாயிற்று. உடம்பு நல்லநிலைமையிலிருக்கும்போது மக்கள்நினைவு ஐம்புலன்களின் வழிச்சென்று சிதர்ந்துபோகுதலானும், அன்றி யங்ஙனம் புறத்தே சிதர்ந்துபோகாவழியும் அது புலன்வழிப்புகுந்த உருவங்களிலும் அவற்றைப்பற்றிய எண்ணங்களிலும் ஈடுபட்டுச் சிதறி விரைந்து இயங்குதலானும் அந்நிலையில் ஒருவரது நினைவு முனைத்துநின்று அவரதுவடிவினைப் பிறரதுகண்ணுக்குப் புலப்படுத்தமாட்டாது. உடம்பு நன்னிலையிலிருக்கும்போதுந் தமதுருவினைப் பிறர்க்குப்புலப்படுத்துவார் சிலர் ஆங்காங்கு உளராலெனின்; அவர் ஆற்றுடைமையினாலாவது நிறைந்த அன்பினாலாவது ஒரோவொருகால் மன வொருமை கைகூடப் பெறுதலால், அச்சிலநேரங்களில் மட்டுமே தம்மையறியாமலே தமதுருவினைப் பிறர்க்குப் புலப்படுத்தாநிற்பர். இன்னுந், தவத்தான் மனந்தூயராய் நினைவையொருவழிப்படுத்தி அப்பழக்கத்திற்பெரிது முதிர்ந்தார்க்கு, அவர் வேண்டிய காலங்களிலெல்லாம் தமதுருவினைப் பிறர்க்குப் புலப்படுத்துந்திறந் தானே எளிதில் உளதாகாநிற்கும். இவரல்லாத ஏனைப்பிறரெல்லாம் இறக்குந்தறுவாயில்மட்டுமே தம்முடைய பொறிபுலன் அடங்கப்பெற்று, அதனால் அவற்றினூடு செல்லுந்தமது மனத்தின் ஆட்டமும் அடங்கப்பெற்று ஒருமுகப்பட்ட நினைவுடையராவர். ஆதலால், மேற்காட்டியவாறு தமக்குரியார்பால் தமதுருவினைத்தோற்றுவிக்கும் நிலை பெரும்பாலும் இறந்துபோகுந்தறுவாயில் உள்ளார்க்கே வாய்ப்பதாகின்றதென்றுணர்ந்துகொள்க. மேற்காட்டிய உண்மைநிகழ்ச்சியில், தந்தையாயினார் தம்மகன்மேற் கொண்ட பெருங்காதலே, அவர்க்கு நினைவொருமையினை மிகுவித்து, அவர்தாஞ் சாகுந்தறுவாயிலிருத்தலை அவர்தம் மகனார்க்கு முன்னறிவித்தற்பொருட்டு அவரதுருவினை மகனாரெதிரே கனவிலன்றி நனவிலேயே தோற்றுவிப்பதாயிற்றென்க.

இனிச், சிலநேரங்களில் ஒருவர் தாம் அறியாமையாற் செய்யப்போகும் ஒருசெயல் அவர்க்குப் பெரியதொரு கெடுதியினை விளைவிப்பதாயிருந்தால், அதனைத்தடைசெய்தற்குரிய சில தோற்

றங்கள் அவர்க்கு நனவிலேயேதோன்றி அவரதனைச் செய்யாவாறு தடைசெய்துவிடுகின்றன. கடவுள் உதவியிலேயே மிக்க நம்பிக்கை வைத்திருப்பவர்கள் அத்தகையதடைகள் கடவுளினாலேயே விளைவிக்கப்படுகின்றன என்பர்கள். நுண்ணுடம்பில் நிற்கும் நல்லெண்ணம் மிக்க நல்லோருடைய ஆவிகளே பருவுடம்பில் நிற்கும் நல்லார் சிலர்க்கு வருந் தீங்குகளை அகற்றுதற்கு அங்ஙனந் தடை செய்தலுண்டென்பர் வேறு சிலர். பின்னுஞ் சிலர், மக்களின் மறைந்த நினைவுகளினாலேயே நடக்கக்கூடிய இன்னோரன்ன உதவிகட்கெல்லாம், இறைவனையும் நுண்ணுடம்பில் நிற்கும் ஆவிகளையுங்கொணர்ந்து தொடர்புபடுத்தல் வேண்டாசெய்தலேயாமென்பர். நுண்ணுடம்பில் நிற்கும் நமதுள்ளம் எந்த நிகழ்ச்சியினையும் மறவாததொன்றாகலின், அது முன் நடந்தவைகளையும் இப்போது நடக்கின்றவைகளையும் இனி நடப்பவைகளையும் நன்கறிந்து, பருவுடம்பில் நினைவு முனைத்துநின்று நாம் அறியாமற் செய்பவைகளையும் மறந்துசெய்பவைகளையும் எல்லாந் தடைசெய்ய வல்லதாமெனக் கூறுவாரே, இஞ்ஞான்று இத்துறையில் நிரம்பக் கருத்தாக ஆராய்ச்சிசெய்வார் குழுவில் மிகுந்துகாணப்படுகின்றனர். ஆனாலும், இத்தடைகள் நமக்குப் புறத்தோ அகத்தோ தொலைவிலோ அண்மையிலோ எங்கிருந்து வருகின்றனவென்று வரையறுத்துச் சொல்லுதல்மட்டும் இன்றுவரையில் எவராலும் இயலவில்லை. அங்ஙனம் வருந்தடைகள், நம்மறிவுக்கு எட்டா ஒரு முதலிலிருந்தே வருகின்றனவென்பதுமட்டும் எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாய் இருத்தலின், அந்நிகழ்ச்சிகளுள் ஒன்றிரண்டு ஈண்டு எடுத்துக்காட்டுதல் இன்றியமையாததாய் இருக்கின்றது.

ஓர் ஆங்கில அம்மையார் தமக்கு நேர்ந்த இத்தகையதொரு நிகழ்ச்சியைப்பற்றி யெழுதிய கடிதத்தின் உண்மை பலரால் ஆராய்ந்து தழுவப்பட்டதொன்றாகலின், அக்கடிதத்தினை இங்கே மொழிபெயர்த்துவரைகின்றாம்:-

“இருபஃது ஆண்டுகளுக்குமுன் தாங்கலில் (தபாலில்) இருந்து ஒருநாள் எனக்குச் சிலகடிதங்கள் வந்தன; வந்த அக்கடிதங்கள் ஒன்றிற் பதினைந்து பொன்னுக்கு நாணயமுறிகள் (bank notes) வைத்து அடக்கஞ்செய்யப்பட்டிருந்தன. அக்கடி

210674

தங்களைப் படித்துப் பார்த்தபிறகு யான் அவைகளைக் கையிலெடுத்துக்கொண்டு சமயலறைக்குட் சென்றேன். அப்போது யான்மட்டும் அங்கே தனியே யிருந்தேன். அக்கடிதங்களைத் திரும்பவும் படித்தபின், அவற்றை நெருப்பில் எறிதற்கு முனைந்தேன். அங்ஙனம் முனைகையில் எவரோ என் கையைப் பிடித்து அவ்வாறுசெய்யவொட்டாமல் தடுத்தலைத் தெற்றென வுணர்ந்தேன். ஏதோவேறொருகை மெதுவாக என்கையைப் பிடித்துப் பின்னே யிழுப்பதுபோற் றோன்றியது. அதனாற் பெரிதும் வியப்புற்று என்கையை உறுத்து நோக்கினேன்; அப்போது என் கையிலிருந்தவைகள் யான் அழிக்கக்கருதிய கடிதங்கள் அல்ல; மற்று அவை நாணயமுறிகளேயாகும்; கடிதங்களோ எனது மற்றைக்கையில் இருந்தன. அங்ஙனமிருத்தல் கண்டு திகைப்புற்றயான், 'யார் இங்கே?' என உரத்துக் கூவினேன்." என்பது.

இம்மெய்ந்நிகழ்ச்சியில் நேர்ந்ததடையானது, அவ்வாங்கில மாதரார் நெருப்பில் எறியமுனைந்த கடிதங்களுடன், அவற்றுள் ஒன்றில் அடக்கஞ்செய்யப்பட்டிருந்த நூற்றைம்பது ரூபா நாணயமுறிகளும் எறியப்பட்டு வீணே அழிந்துபடாமற்காத்து, அவர்க்குப் பேருவிசெய்தமை காண்க.

இன்னும், ஒருசெல்வரது இல்லத்திற் குளியலறையில் ஒரு தண்ணீர்த்தொட்டி அமைக்கப்பட்டிருந்தது. அதில் நிரம்பியிருக்கும் நீர் ஒருபெரிய ஆளுக்குக் கழுத்தளவேயுள்ளதாயினும், ஒரு சிறுபெண்ணுக்கு நிலையாத ஆழமுடையதாயிருந்தது. ஆதலால், அவ்வீட்டிலுள்ள பெரியவர்கள் தம் சிறுவர் சிறமிகள் அவ்வறைக்குள் நுழையாதபடி அதனைப் பூட்டிட்டு வைப்பது வழக்கம். மேலும், அவ்வறை வீட்டின் புறக்கடையில் தனியே யிருந்தமையால், அதனுள்ளிருப்பவர் வீட்டின் முன்பக்கத்தேயிருப்பவரைக் கூவியழைத்தாலும், அவ்வழைப்பொலி அவர்க்குக்கேளாது. ஆனதுபற்றி, அக்குளியலறையில் அழைப்புமணியொன்று கட்டப்பட்டிருந்தது. ஈதிங்ஙனமிருக்க, அங்குள்ள ஒரு சிறுபெண் ஒருநாட் புறக்கடையில் விளையாடச்சென்றவள், அங்கே அக்குளியலறை அன்றைக்குப் பூட்டப்படாமல் திறந்திருக்கக்கண்டு, அதனுட்சென்று தான் தனியாகவே அத்தண்ணீர்த்தொட்டியிற் படிவழியே இறங்கி நீராடவிரும்பித், தன்னை வீட்டிலுள்ளபெரியவர் எவரேனும் பார்த்தால் நீராடவிடாரென நினைத்து, அவ்வறைக்கதவைச்சாத்தி உள்ளே தாழ்இடப் புகுந்தாள். அப்போது அவ்வறையினுள்ளே தன்னைத் தவிர வேறெவரும் இல்லாதிருந்தும், அதன் ஒரு மூலையிலிருந்து "கதவைச்சாத்தாதே, திற!" என்று ஓர் ஒலி நான்குமுறை தோன்றிற்று. அதனைக்கேட்ட அச்சிறுபெண் பெருந்திகில் கொண்டவளாய், அங்கே கட்டுண்டிருந்த மணியை உரமாக இழுத்தடித்துவிட்டுக், கீழே உணர்விழந்து விழுந்துவிட்டனள். முன்பக்கத்தே யிருந்தவர்கள் அம்மணியோசையைக்கேட்டுக் குளியலறைக்கு ஓடிவந்துபார்க்க, அச்சிறுபெண் உணர்வின்றிக்கிடத்தல்கண்டு, அவளை வாரியெடுத்துக்கொண்டுபோய், மயக்கந்தெளிவித்து, நடந்தவரலாற்றை அவள் வாயாற்கேட்டுக், கடவுளுக்கு நன்றிசெலுத்தினார்கள். பாருங்கள்! அக்குளியலறையில் அத்தெய்வவொலி தோன்றி அச்சிறுபெண்ணைத் தடைசெய்யாதிருந்தால், அவள் அங்கிருந்த தண்ணீர்த்தொட்டியில் இறங்கி நீரிலமிழ்ந்தி இறந்துபோயிருப்பளன்றோ?

இன்னும், அமெரிக்காவிற் பாஸ்டன் (Boston) என்னும் பெருநகரில் 1890-ம்ஆம் ஆண்டு ஆவணித்திங்களில் ஒருநாள் ஒருபெரிய உணவுவிடுதியில் நேர்ந்த ஒருநிகழ்ச்சி பெரிதும் வியக்கத்தக்கதொரு தெய்வத்தடையாய் இருத்தலின் அதனையும் இங்கே வரைகுதும்:-

அமெரிக்காப் பெருநகரங்களிலுள்ள உணவுவிடுதிகள் பத்துப் பதினைந்து அடுக்குகள் உடையனவாய், அகலநீள உயரங்களில் மலைகளையே ஒப்பனவாய், உள்ளேசென்று நோக்குவார்க்குத் தம்மகத்துள்ள அரியபெரிய அழகிய பண்டங்களின் அமைப்பாலும் மின்விளக்குகளின் ஒளியாலும் வானுலகே கீழ்இழிந்து விளங்குதலை நிகர்த்துத் திகழ்வனவாகும். அம்மாளிகைகளிற் கீழேயிருந்து மேற்செல்லுதற்கும், மேலிருந்து கீழிறங்குதற்கும் படிகள் அமைக்கப்பட்டிருந்தாலும், அவற்றின்வழியே ஏறுதலும் இறங்குதலும் நேரம்பிடிப்பதுடன் மெய்வருத்தத்தையுந்தரும். ஆதலால், மேலடுக்குகளின் மேற்செல்வார் இறங்குவார்க்கு எளிதாக உதவிசெய்யத்தக்க தூக்குக்கூடுகள் (lifts) ஒவ்வோர் உயர்ந்த அடுக்குமாளிகைகளிலும் அமைக்கப்பட்டிருக்கும். கீழே

ஓரடுக்கிலுள்ள ஓரறையில் ஒரு தூக்குக்கூட்டிற்சென்று ஒருவர் நின்று அதனை எந்தமேலடுக்குக்குச்செலுத்த இயக்கினாரோ அந்த மேலடுக்குக்கு அஃது அவரை ஒருநொடிப்பொழுதில் தூக்கிக் கொண்டுபோய்விடும். அது நேரே கீழிருந்து மேற்செல்வதும், மேலிருந்து கீழ்ச்செல்வதுமாதலால், அஃது ஏறியிறங்கும் நெடுக்கு ஓர் ஆழமானகிணறுபோல் மேலிருந்து நோக்குவார்க் குத் தோன்றாநிற்கும். மேற்குறிப்பிட்ட ஆண்டின் ஆவணித் திங்களில் ஒருநாள் அப்பாஸ்டன் நகரிலுள்ள ஒருசிறந்த உணவு விடுதியின் மேன்மாளிகையிற் றங்கியிருந்த ஒருமாதரார், தாம் கீழ் இறங்கவேண்டியிருந்தமையால் உடனே அங்குள்ள தூக் குக்கூடு மேல்எழுமாற மணியடித்துவிட்டு, அது வருமிடத்தின் ஓரத்திற்கு விரைந்தோடினார். ஆனால், அப்போது அங்குவந்து நின்றதுபோல் அம்மாதரார் கண்களுக்குத் தோன்றிய தூக்குக் கூட்டின்வாயிலின் எதிரே ஓர் ஆடவன் நிற்கக்கண்டு, அவர் அதன்கட்சென்று ஏறாமற் பின்தாங்கினார். பின்தாங்கிய சிறிது நேரத்திலெல்லாம் ஒரு தூக்குக்கூடுவிளக்கொளியுடன்மேலேறித் தான் நிற்கும் இடத்தின் ஓரத்தில் வந்துநிற்கவும், இப்போது அதன்கண் எவரும் இன்றி அதுவெறுமையாய் இருக்கவுங் கண்டு அதன்கண் அவர் ஏறிக் கீழ் இறங்கினார் என்பது.

இந்நிகழ்ச்சியிற் போந்த மாதரார் கண்களுக்கு முதலில் ஓர் ஆடவனுடன்தோன்றிய தூக்குக்கூடு உண்மையானதன்று. அது, தான்விரைந்து கீழிறங்கவேண்டும் என்னுங் கலவரத்தால் ஓடி வந்த அவருடைய கண்களுக்குப் பொய்யாகத்தோன்றிய பொய்த் தோற்றமாகும். அதனை உண்மையெனநம்பி அதனிற் கால்வைத் திருந்தால் அவ்வம்மையார் கீழ்விழுந்து மடிந்துபோயிருப்பர். அவர் அப்பொய்த்தோற்றத்தை நம்பி உயிர் இழவாமைப்பொருட் டே அப்பொய்க்கூட்டின் வாயிலிற் பொய்யான ஓர் ஆண் மகனுருவமும் உடன்றோன்றி அவர் அதன்கண் ஏறாமற் றடை செய்தது. இதுகொண்டு, நாம் விரைந்து கலவரப்படுங்கால் உண் மையல்லாத பொய்த்தோற்றங்கள் காணப்படுமென்றும், அவற் றை நம்பினாற் பேரிடர் உண்டாமென்றும், எவரோ உயர்ந்த இயற் கையுடையார் சிலர்மட்டும் அத்தகைய பொய்த்தோற்றங்கட்குத் தப்பி உய்யுமாறு சிலதெய்வத்தடைகள் புகுந்து உதவிசெய்யு

மென்றும், அவரல்லாத பிறர்க்கு அத்தகையதடையுதவிகள் வரு தல் அரிதாகையால் அவரெல்லாம் மிகவும் விழிப்பாகவேயிருக்க வேண்டுமென்றும், நல்லார் சிலர்க்குத்தோன்றுந் தடையுதவிகள் ஆங்காங்கு உண்மையாகவே நிகழ்கின்றனவென்றும் நாங் கருத் திற் பதித்தல்வேண்டும்.

இனிக், கொடும் பிணியாற் பற்றப்பட்டு மிகவுந்துன்புறு வோர், தமக்கு நெருங்கிய நேயராய் இருப்பவரை நினைந்து, அவர் தம்பால் வந்திருக்க வேண்டுமென்று விழைகுவராயின், அவர்கொண்ட நினைவு அவர்தம் நேயர்க்கு அதனை முன்னறி வித்து, அவரை அவர்பால் வரச் செய்தலும் ஆங்காங்கு நிகழா நிற்கின்றது. இதற்கு, மெய்யாக நிகழ்ந்த தொன்றனை இங்கெடுத் துக் காட்டுவாம்:

சிறந்ததொழிலாளி ஒருவர் தாம் நடத்துந் தொழிலைச் சிறிது காலம் விட்டுவைத்து, இளைப்பாறி இன்புறுதற்காக இள மரக்கா மிடைந்த ஒரு நாட்டுப்புறத்தூரிற்போய்ச் சிறிதுகாலந் தங்கினார். ஒருநாள் அவர் காலையுணவு கொள்ளுகையில் தம் மனைவியாரை நோக்கி, "நமக்குச் சிறந்த நேயரான க...என்னும் அம்மையாரைப்பற்றி எனக்கு அடுத்தடுத்து நினைப்பும் ஒரு வகையான மனக்கலக்கமும் உண்டாகின்றன. அவ்விரண்டை யும் என் உள்ளத்தினின்றும் அகற்றமுடியவில்லை; நீ இன்று பிற் பகல் அந்த அம்மையாரைப் போய்க்கண்டு, அவரும் அவர்தங் குடும்பத்தாரும் எப்படியிருக்கின்றார்கள் என்று தெரிந்துகொள் வதுநலம்" என்றுகூறினார். அதுகேட்ட அவர்தம் மனைவியார் வியப்புடன், "இதுபுதுமையாய் இருக்கின்றது! நமக்கு நண் பரான அந்த அம்மையாரைப்பற்றியே யானும் மிகுதியாய் நினைத்துக்கொண் டிருந்தேன்; அதைப்பற்றி உங்களுக்குச் சொல்ல யான் வாயெடுக்கையில் நீங்களும் அதனையே எனக்குச் சொன்னீர்கள்." என்று மறுமொழிகூறினார். இவ்விருவரும் இங்ஙனம் பேசத்தொடங்குதற்கு அரைமணி நேரத்திற்கு முன் னேதான் இருவருள்ளத்திலும் அந்நினைவு அங்ஙனம் வலுப்பெற் றுத் தோன்றலாயிற்று. இருவரும் அங்ஙனங் கலவரப்பட்டு நினைத்த க...என்னும் அம்மையார், அவர் இருந்த அவ்வூருக்கு அந்தப்பக்கத்துக் கடைசியில் இருந்தனர்; அவரை இவர்கள்

மூன்று திங்கட்கு முன்னேதான் சென்றுபார்த்தனர். அப்போது அவர் உடம்பின் நலத்தொடுதான் இருந்தனர். ஆனால், இப்போது அவரைப்பற்றிக்கொண்ட கலவரத்தைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு, இவ்விருவரும் அன்றைப் பிற்பகலே வீட்டினின்றும் புறப்பட்டு அந்த அம்மையாரைப் பார்க்கச்சென்றார்கள். சென்று அவரது வீட்டண்டை சேர்ந்ததும், அவ்வம்மையின் தங்கையார் வீட்டுள்ளிருந்து வெளியே வாயிலில் வரக்கண்டார். வந்த தங்கையார் இவ்விருவரையுங்கண்டதும் இறும்பூதுற்று, "யான் உங்களைத்தாம் பார்க்கப்புறப்பட்டேன்; நீங்கள் இன்றைக்கு இங்கேவந்து என் தமக்கையாருடன் தங்கியிருக்கக்கூடுமா என்று தெரிந்துகொள்ளுதற்கே புறப்படலானேன். என் தமக்கையார் மிகவும் நோயாய் இருக்கின்றார்; அவருக்கு உண்டான ஒரு கட்டியை இன்றைக்கு அறுக்கவேண்டியிருக்கின்றது. ஆதலால், தமக்கையார் உங்களைப் பக்கத்தில் வைத்துக்கொள்ளப் பெரிதும் விழைகின்றார்." என்று வந்த அம்மையாரை நோக்கி நுவன்றனர் என்பது.

இம்மெய்ந்நிகழ்ச்சியிற் கொடியதொரு கட்டியினால் துன்புற்றிருந்த அம்மையார் தமக்கு அன்பிற்சிறந்த நேயரான மற்றோரம்மையாரைத் தம்பால் வந்திருக்கவேண்டி உறுத்துநினைந்த நினைவானது, நினைக்கப்பட்ட அம்மையார்க்கும் அந்நினைவினைத் தோற்றுவிக்க, அவ்வம்மையார்க்குத் தோற்றுவிக்கப்பட்ட அந்நினைவு அவர்க்குச் சிறந்த அன்புடையரான அவர்தங் கணவருள்ளத்துந் தோன்றலாயிற்று.

இன்னும், வறுமையால் துன்புறும் அடியார் சிலர்க்கு, அவர் வேண்டும் உதவியினைச் செய்யும் எண்ணம் மற்றைப்பிறர்க்கு வலிவாகத் தோன்றுதலால், அவர் உடனே அவர்பாற்சென்று அவ்வுதவியினைச்செய்து அவரது மிடிதீர்த்த வரலாறுகளும் பல. அவற்றுள் ஒன்றனை இங்கெடுத்துக்காட்டுதும்:-

"மறைபொருட்காட்சி" என்னும் நூலின் ஆசிரியர் (James Coates) பின்வருமாறு எழுதுகின்றார்: "இத்தகைய நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்ப்பதில் யான் சிறிதுங் கருத்தின்றியிருந்த சில ஆண்டுகளுக்குமுன், யான் இலிவர்ப்பூல் என்னும் நகரிற் குடியிருந்தபோது, உவாக்கர் என்னுங் கோயிற்காவலாளர் ஒரு

வர் எனக்கு நண்பரானார். இவர் படைஞராயிருந்தவர்; இப்போது ஆண்டில் முதிர்ந்தவர்; கடவுளிடத்தில் அன்பும் நம்பிக்கையும் மிக்கவர். இவ்வுலகத்துப்பொருளில் ஏழையாயிருப்பினும், இறைவன் நேயத்திலும் பெருந்தன்மையிலும் இயற்கை வாழ்விலுஞ்சிறந்த செல்வரென்றே இவரைச் சொல்லல்வேண்டும். யான் சில திங்களாக இவரைக்காணாதிருந்தும், இவரைப்பற்றி யான் ஏதுமே நினையாதிருந்தும், ஒருநாட்காலையில் யான் தெருவழியே விரைந்துபோய்க்கொண்டிருக்கையில் இவரைப்பற்றி மிகுதியாக நினைக்கலானேன். அந்நினைவை மாற்ற எவ்வளவோ முயன்றும், அஃதென்னாற்கூடவில்லை. அவரைப்பற்றியே என் மனந் தொல்லைப்படுவதாயிற்று. 'அவர்க்கு உடம்புதான் நலமில்லையோ ? அல்லது அவர்க்கு ஏதேனுந்தான் வேண்டியிருக்குமோ ? என உள்ளுக்குள் வினவி, நல்லது அவரை விரைந்துபோய்க் காண்பேன்' என்று சொல்லிக்கொண்டு விரைந்தேகி அவரது வீட்டுக்கதவைத் தட்டினேன். ஏன் என்று எவரும் வரவில்லை. அதன்மேற், கதவை உற்றுநோக்க அது தாழிடப்படாமற் சந்துவிட்டிருத்தல் கண்டேன். பிறகு, யானே அதனைத் திறந்து, மெல்ல உள்ளேசென்று பார்க்க, ஆண்டில் முதிர்ந்த உவாக்கரும் அவர்தம் மனைவியாரும் அடுக்களையிலே முழந்தாளிட்டபடியாய்க் கடவுளைத் தொழுதுகொண்டிருத்தல் கண்டேன். அவர் மிகவும் உருக்கமாய் இறைவனை வேண்டிக்கொண்டிருந்தார். சிறிது பின்றங்கிப், பிறகு யான் அவரை வணங்கி, அந்நேரத்தில் யான் புகுந்து குறுக்கிட்டமைக்காக அவரை மன்னிப்புக்கேட்டேன். 'யான் பட்டினத்திற்குட் சென்றுகொண்டிருக்கையில் தங்களைப்பற்றி இடைவிடாது நினைந்து என்மனந் துன்புற்றது. தங்களைப்பார்த்து உண்மை தெரிந்தாலல்லாமல் என்மனம் அமைதியுறாது எனத்தேர்ந்து தங்கள்பால் வந்தேன்' எனக்கூறினேன். அதுகேட்ட அம்முதியவர், தம்மிடம் ஒரு காசும் இல்லாத நிலையில், உணவுப்பொருளும் விறகும் இன்றி மிடிப்பட்டமையால், அதனைத் தாம் இறைவனுக்குத் தெரிவித்துக்கொண்டிருந்ததாக மொழிந்தனர். அப்போது என்னிடத்தில் ஓர் அரைப்பொன் நாணயம் இருந்தது. அதனை யெடுத்து அவரது கையில் வைத்தேன். அம் முதியவர் தம் கண்களி

னின்று புறப்பட்ட கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தம்மனைவியாரைநோக்கி, 'மேரி, கடவுளின் அருளைப்பற்றி இனி நீ எக்காலும் ஐயங்கொள்ளாதே! நமக்கு அவர் உதவிசெய்வாரென்று நான் சொன்னேனே. நான் கேட்டதை அவர் கொடுத்துளாரன்றோ?' என்று விளம்பினார். பின்னும், அவர் தாம் விறகு வாங்குதற்குக் காசுஇல்லாமல் வறுமைப்பட்டதையுந், தமக்கு ஐந்து ரூபா தரும்படி இறைவனைத் தாம் வேண்டியதையுந், தாம் வேண்டியபடியே அவ்வைந்துரூபாய்க்கு ஒரு பொன்நாணயம் பெற்றதையும் எடுத்துரைத்தார்.'' என்பது.

''வேண்டியார் வேண்டியதே ஈவான் கண்டாய்'' என்னும் அருட்சான்றோர் திருமொழிப்படி, இறைவன் தன்னை யார் எது வேண்டினாலும் அது வழங்கும் பெருந்திருவாளன் என்பது, மேற்காட்டிய மெய்ந்நிகழ்ச்சியினால் நன்கு புலனாகின்றதன்றோ? அப்பருந் திருஞானசம்பந்தப் பெருமானுந் திருவீழிமிழலையில் இருந்தஞான்று, மாரிபெய்யாது மறுப்ப எங்கும் வறங்கூர்ந்தது. அதனால் மன்னுயிர்களெல்லாம் நீரும் உணவும் பெறாது கொடுந்துயர் உழக்க, அப்பரையுந் திருஞானசம்பந்தரையுஞ் சார்ந்துவந்த அடியார்களும் உணவின்றிப் பசித்துவருந்தினர். அது கண்டு உளம் வெதும்பிய அப்பெரியார் இருவரும், இறைவனை நோக்கி வழுத்திப்பாட, இறைவன் எங்ஙனமாகவோ அவ்விருவர்க்கும் பொற்காசுகள் வழங்கினனென்றும், வழங்கிய அப்பொற்காசுகள் கொண்டு அவர்கள் உணவுப்பொருள் தொகுத்து அடியார்தம் அழிபசி தீர்த்தனரென்றும் அவ்விருவரும் அந்நேரத்திற் பாடியருளிய திருப்பாட்டுகளாலும், அவ்விருவரையும் அடுத்துத்தோன்றிய சுந்தரமூர்த்திநாயனார் தாம் அருளிச்செய்த திருவீழிமிழலைப்பதிகத்தில்,

''இருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையாற் காசு நித்தல் நல்கினீர்'' என அதனைக் குறிப்பிட்டமையாலும் நன்கறிகின்றனம் அல்லமோ?

இன்னும், 'இக்குமானி' என்னும் மருத்துவமாதரார் ஒருவர் இருந்தாற்போலிருந்து திடீரெனக் காணாமற்போயினர். அவராற் பலர்க்குப் பேருதவிகிடைத்துப் பெருநன்மை விளைந்துவந்தமையாற் சடுதியில் அவர் காணாமற்போனது குறித்துக் குடிமக்களும் பிறரும் பெருந்துயர்கூர்ந்து, அவரைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்றுபார்த்தனர். எவராலும் அது முடியவில்லை. கடைசியாக, 'உவில்வர் வோரர்' என்னும் புகழோங்கிய சமயகுரு ஒருநாள் தாம்புரிந்த அறிவுரை கேட்கவந்த குழுவினரைநோக்கி ''இன்றைக்கு நீவிர் எல்லீரும் ஒருமுகமாய் நின்று, மாயமாய் மறைந்துபோன இக்குமானியம்மையைத் தரும்படி இறைவனை வேண்டித்தொழுமின்கள்!'' எனக்கட்டளையிட்டார். அவர் இட்ட கட்டளைப்படியே அக்குழுவினர் அனைவரும் ஒருவழிப்பட்ட உள்ளம் உடையராகி, மறைந்துபோன அம்மாதரைத் திரும்பத்தரும்படி வேண்டிக்கேட்டனர். அவர்கள் அங்ஙனம் வேண்டிய அதேநாளின் பிற்பகலில், அம்மாதரின் உடலம் ஒரு நீர்நிலையினின்றுங் கண்டெடுக்கப்பட்டது.

இம்மெய்ந்நிகழ்ச்சியினாலுங் கடவுளை வேண்டிக்கேட்பது வீண்போகாதென்பது தெளியப்படுகின்றதன்றோ? நாம் வேண்டுவனவெல்லாங் கடவுளிடமிருந்து நேரே வருமென்று எதிர்நோக்குதல் ஆகாது. நேர்முகமாகவோ, அல்லது அவ்வுதவிகளைச் செய்யத்தக்கார் வாயிலாகவோ அவை கிடைத்தல் திண்ணம். ஆனாற், கேட்டது கேட்டபடி பெறுதல் கேட்பாரின் மனத்திட்பத்தையுங், கேட்கப்பட்டதன் நன்மை தீமையையும் பொறுத்திருக்கின்றது. எது தக்கதோ அது கிடைப்பதுமட்டும் உறுதி.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'' என்னுந் திருக்குறளும் இதனையே வற்புறுத்துதல் காண்க.

இன்னும், உயர்ந்த நூலாசிரியரும் ஆங்கில நல்லிசைப்புலவருமான அந்துரு லாங்கு (Andrew Lang) என்பவர் தம் நண்பர் ஒருவரின் தோற்றத்தைக் கண்ட நிகழ்ச்சி வியக்கற்பாலதொன்றாயிருத்தலின், அதனையும் மற்றொன்றனையும் இங்கெடுத்துக் காட்டி அவ்வளவில் இப்பகுதியை முடித்து மேற்செல்வாம்:-

இக்குறிப்பிட்ட ஆசிரியர் தமது இல்லத்தின் முன்புறத்தே ஒரு பலகணியண்டையிலிருந்து ஒருநாள் எழுதிக்கொண்டிருக்கையில், எவரோ தமது தோட்டக்கதவைத் திறந்துகொண்டு உள்வருதலைக்கண்டார். கண்டு, வந்தவர் யார் என உற்றுநோக்க, அவர் கு...எனப்பெரிய தம் நண்பராயிருத்தலைத் தெரிந்

தார். தெரிந்ததும், அந்நண்பர் தாம் இருக்கும் பலகணிக்கு நேராக வரும்வழியே வருதலும் பார்த்தார். அப்போது பட்டப் பகல்வேளை. உடனே தம் நண்பரை வரவேற்றற்பொருட்டாக அவ்வாசிரியர் தமது இருக்கையினின்றும் எழுந்து, தாம் இருந்த அவ்வறையின்கதவைத் திறந்து அவரையுள்ளே அழைத்தற்காகக் கதவண்டைசென்றார். சென்று கதவைத்திறந்ததுந் தம் நண்பரை அங்கே காணாராகிப் பெரிதுந்திகைப்புற்றனர். பின்னர், அதே நாளின் நண்பகற்பொழுதில் தமது பசனுணை எடுப்பதற்காக அவ் வாசிரியர் அதே நண்பரது இல்லத்திற்கு ஏகி, அவர்தம் மனைவி யாரை நோக்கித் தாம் அன்றைக்காலையில் அவரைக்கண்ட வரலாற்றினை எடுத்துரைத்தார். அதுகேட்ட அவ்வம்மையார் பெரிதும் இறும்பூதுற்றுத், தம் கணவனார் அன்றைப் பகல் முழு தும் வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை யென்றும், ஆனால் அவரை அவ்வாசிரியர் தமது தோட்டத்தினுள்ளே வரக்கண்ட அதே நேரத்தில் அவர் தமது படுக்கையில் நோயாய்க்கிடந்தன ரென்றும் நுவன்றனர்.

இம்மெய்ந்நிகழ்ச்சியில் தம் நண்பரின் நினைவுருவினைக் கண்ட ஆசிரியர் அந்துருலாங்கு இதற்கு முன்னெல்லாம் இத் தகைய வியத்தகுதோற்றங்களைச் சிறிதும் நம்பாதவராய், இன்னோ ரன்ன மறைபொருள் நிகழ்ச்சிகளைப் பேருழைப்பும் பேரறிவுங் கொண்டு அரிதாராய்ந்து அவற்றின் உண்மைகளைக் கற்றோரெல் லாம் ஏற்றுமகிழ்ந்து கொண்டாடும்படி நிலைநாட்டிய நல்லிசைப் புலவரான **மையர்சு** (Myers) என்னும் பேராசிரியரையும் பகடி செய்தவராவர்; பின்னர்த் தாமே தம் கட்புலனால் இத்தன்மைய வான மறைபொருட் டோற்றங்களைக்கண்டு, அவற்றின் உண்மை களைத் தேர்ந்து தெளிந்தகாலந்தொட்டே இவரும் அவைகளை நம்பி அரியநூல்கள் சில இத்துறையில் இயற்றினவர் ஆவர். அது நிற்க.

இனிப், பிற்கூறப்படும் வியத்தகு நிகழ்ச்சியானது சிறந்த ஓர் ஆங்கிலக்கிழமைத்தாளில் வெளிவந்த.தொன்றாகும். அத்தா ளின் ஆசிரியர் அந்நிகழ்ச்சியின் மெய்ம்மையினைச் சான்று களான் ஆராய்ந்து உறுதிப்படுத்தி யிருக்கின்றாராகலின், அதனை யும் ஈண்டெடுத்துவரைகின்றாம்:-

"ஓர் இளையமங்கை தனக்குமணமகனாக உறுதிப்படுத்தப் பட்ட இளையானிடஞ் சென்று சேர்தற்காகப் புகைவண்டியிற் 'கேம்பிரிச்சு' மாநகரை நோக்கிப் போய்க்கொண் டிருந்தாள். இடையே வண்டியானது தங்கும் ஒவ்வொரு நிலையிலும் அவள் தன் னிருக்கையினின்றும் எழுந்து சாளரத்தின் வெளியே நோக் கித் திகில்கொண்ட முகக்குறிப் புடையளாய்த் துன்புற்றுக் கொண்டிருந்தாள். அவளுக்கு அண்மையில் அமர்ந்திருந்த ஒரு முதியவர் அப்பெண் அங்ஙனம் ஒவ்வொரு நிலையிலும் எழுந்து சாளரத்தின் வெளியே நோக்கி வெருக்கொண்டு வெம்புதலைத் தொடர்பாக நோக்கி, 'அம்மே, நீ ஏன் இங்ஙனம் எழுந்தெழுந்து வெளியே நோக்கி வருந்துகின்றனை?' என வினவினர். அதற்கு அப்பெண், 'யான் கேம்பிரிச்சிற் காணப்போகும் என் காதலர், இடையே இவ்வண்டி தங்கும் ஒவ்வொருநிலையின் மேடைமே லும் போந்து என்னை வண்டியைவிட்டுக் கீழே இறங்கும்படி பெருந் திகிலொடு கைக்குறி காட்டுகின்றார்; என்செய்வேன்!' எனமொழிந்து தன்கைகளை நெரிந்தனள். அதன்மேல் அம் முதியவர், 'அப்படியானால், யான் சொல்வதை எடுத்துக்கொள்! அடுத்த நிலையில் அவ்விளைஞர் மறுபடியும் போந்து உனக்குக் கைக்குறிகாட்டினால், உடனே நீ வண்டியைவிட்டுக் கீழே இறங்கிவிடு!' என வலியுறுத்திச் சொன்னார். அடுத்தநிலையில் அவ்வண்டி வந்துநின்றதும், அவ்விளைஞர் அம்மேடைமேல் மறு படியும்போந்து, முன்னையைவிட இப்போது கழிபெருந்திகில் கொண்டு கைக்குறிகாட்டக்கண்டாள். கண்டதும் அப்பெண் அம்முதியவர் கற்பித்தபடியே வண்டியைவிட்டுக் கீழே இறங்கி விட்டனள். அம்முதியவரும் அவளுடன்கூடவே வண்டியை விட்டு இறங்கினர். இருவரும் பின்னர்ப்போந்த வண்டியிலேறிக் கேம்பிரிச்சுமாநகர் சேர்ந்தனர். அங்கே சேர்ந்ததும், அதற்கு முன் தாம் ஏறியிருந்த புகைவண்டியின் பெட்டி ஓரிடரில் அகப்பட்டு அழிந்தமையால் அதிலிருந்தவர்களிற் பெரும்பாலார் மாண்டுபோன செய்தி தெரிந்து வியப்புற்றுத், தாம் உயிர்தப்பின மைக்காக இறைவனுக்கு நன்றிசெலுத்தினர். இங்கே நினைவிற் பதிக்கற்பால தொன்றுளது: அவ்விளம்பெண்ணின் காதலனது ஆவியுருவம் அவட்குமுன்னே ஒவ்வொரு வண்டிநிலையிலுந்

தோன்றி, அவள் அவ்வண்டியைவிட்டுக் கீழே இறங்குமாறு கைக்குறி செய்த நேரத்தில், அவ்விளைஞன் கேம்பிரிச்சு வண்டி நிலையின் ஓரறையில் இவளது வரவுகாத்து அயர்ந்து நன்றாய் உறங்கிக்கொண்டிருந்தனன்; விழித்தபின் அவன் இச்செய்தியை அறியாதவனாகவே காணப்பட்டனன் என்பது.

பலர்க்குத் தோன்றிய நினைவுருவங்கள்

கனவிலோ நனவிலோ ஒருவர்க்குத் தோன்றிய நினைவுருவங்களின் வியத்தகு தோற்றங்களைப் பற்றியே பெரும்பாலும் மேலே விளக்கிப் போந்தாம். இனி, ஒருவர்க்குமேல் இருவர் மூவர்க்குக் கனவிலும் நனவிலும் ஒரேகாலத்திற் றோன்றிய வடிவங்களைப் பற்றி இங்கே சிறிது விளக்கிக்காட்டுவாம். உறுத்து நினைந்த ஒருவரது நினைவு அவரது வடிவத்தினை, அவரொடு தொடர்புடையார் பலர்தங் கட்புலனெதிரே விளங்கக் காட்டுதல் பெரிதும் இறும்பூது பயப்பதாகலின், அவ்வியல்பினை நம்மனோர் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாத தாகும். மேலும், ஒரே காலத்தில் ஒரு நினைவுருவினைப் பலர் காணவல்லராயின், அப்பலரும் ஏறக்குறைய ஒத்த மனவியற்கை வாய்ந்தவராயிருத்தலும் அதனாற்போதராநிற்கும். முதலிற் கனவின்கட் பலர்க்குத் தோன்றிய நினைவுருவங்களை எடுத்துரைப்பாம்.

1887-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 14, 15-ஆம் நாள் இரவிற் பாரிசுமாநகரி லிருந்த ஆசிரியர் இரிச்செத்து (Prof. Richet) என்பவர்க்குரிய 'உடலாராய்ச்சி நிலையம்' நெருப்புப் பற்றி எரியலாயிற்று. அவ்வாசிரியர்க்கு மிகநெருங்கிய நண்பர் இருவர் அப்போது நன்றாய் உறங்கிக்கொண்டிருந்தவர்கள் தம் கனவினிடத்தே அந்தீப்பற்றியெரிதலைக் கண்டு அரண்டெழுந்துகூவினர். 15-ஆம் நாள் மாலைநேரத்தில் ஒரு மருத்துவ ஆசிரியர் அறிதுயிலிற் செல்லப்பழகிய ஓர் அம்மையாரை அறிதுயிலிற்செலுத்தினர். அவ்வம்மையார் அறிதுயிலிற் சென்றதும் அந்நிலையந் தீப்பற்றியெரிதலைத் தாமும் அந்நிலையிற்கண்டு அங்ஙனமே அரண்டெழுந்துகூவினர். உடனிருந்தவர்கள் அவரை அமைதிப்படுத்துவது சிறிது வருத்தமாயிருந்தது.

210474

OCEAN OF WISDOM

An English Bi-Monthly

BY

SWAMI VEDACHALAM

It is being arranged to bring out from the middle of June, 1934, an English bi-monthly named *Ocean of Wisdom* in order to acquaint the English knowing world with the history, the religion, the philosophy and the literature of the Tamil country, by publishing in it not only original articles on these subjects but also translations of some important Tamil works with cxegetical commentaries.

Each number will contain 32 pages demy, and each subject when completed will form into a regular treatise. At present the editor's original works alone will appear; and after sometime when sufficient encouragement and financial help are obtained, the number of pages will be increased and with it of course the rate of subscription also, so as to make room for translations of great Tamil works as well as for the contributions coming from outsiders.

The subscription for the 1st vol. of 6 nos. is Rs 3 including postage, and it must be paid in advance. Or the intending subscribers in India and Ceylon may receive the 1st no. by V.P.P. for its subscription. Those who live in foreign countries will kindly remit their subscription by British Postal Order.

Except Dr. Caldwell's great work "*The Comparative Grammar of the Dravidian Languages,*" and Dr. G. U. Pope's excellent translations of some Tamil classics, there is little in English worthy of note that helps to a correct understanding of the products of the Tamilian intellect. While even the savage races dwelling in caves and forests that lie in the out-of-the-way corners of the world, have bulky volumes written of their lives, customs and manners by such brilliant writers as Frazer, Westermarck and others, it is greatly to be deplored that the Tamils who had been the first civilized nation of the ancient world have no adequate representation in the historical, religious and philosophical literature in English. Neither in the famous *Sacred Books of the East* series of 49 vols. edited by that great oriental scholar Prof. Max

Muller, nor in the still later *Harvard Oriental Series* of 32 vols. edited by Dr. C. R. Lanman of Harvard University, is there included any old Tamil work either literary or religious. So deplorable an absence of even eminent Tamil works in English is due as much to the growing and unexampled selfishness of the rich Tamils and their extreme ignorance of their own literature, as to the poverty and illiteracy of the ordinary people and to the unlimited aversion shown by the priestly classes to Tamil. If this lamentable state of affairs should cease to continue, if the enlightened Tamilians should like to secure a proper place for themselves and their descendants in the midst of the advancing nations of the modern world, they must seek at once to remedy these defects and work themselves up to get their glorious literary heritage fully represented in English.

Twenty four years ago the editor published a monthy magazine in English named 'The Oriental Mystic Myna' for a year. But as he was then employed as a lecturer in Tamil in the Madras Christian College, as he was at the same time running a Tamil magazine Jnanasagaram which has just completed its 31st year, as he had been constantly going through India and Ceylon delivering lectures on Saiva Siddhanta, and as he was not helped substantially so as to meet the enormous expenses incurred in carrying on his literary and religious work he had to stop the publication of the English magazine after one year.

Since that time however he has not been keeping quiet but has been publishing his Tamil magazine Jnanasagaram—glad to say that with its current 17th vol. it enters on its 32nd year, and has produced more than 32 works in Tamil up to this time, dealing with various subjects of great human interests.

Now in response to the desire of some of his freinds he ventures again to publish an English magazine once in two months, and its existence and good work will depend mainly on the kind of substantial help the English knowing Tamils readily render him.

Specimen Copy 12 as.

Please send your subscription to

THE T. M. PRESS,

PALLAVARAM.